7/10/1951 M.V.M BANGALORE, 2

போர்வாள்

வாள் 5 வீச்சு 5
6-10-51 சனிக்கிழமை
ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B.A.Hons
துணை ஆசிரியர்:
காஞ்சி. கல்யாணசுந்தரம்
விலை 2 அணா

ஆந்திரமும் ஆத்திரமும்

ஆந்திரநாடு இன்றைய தினம் ஆத்திர நாடாகக் காட்சி அளிக்கிறது.

ஆந்திர மக்களுடைய உள்ளம் குமுறும் எரிமலையோ எனஐயுறத்தக்க வண்ணம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

ஆந்திர அரசியல் தலைவர்களெல்லம் அனல் கட்டிகளை அள்ளி வீசுவதுபோலக் கடுங்கோப வார்த்தைகளைக் கனஜோராக வீசிவருகின்றனர்.

ஆந்திர மொழி ஏடுகள் ஒவ்வொன்றும் தீப்பொறி பறக்கும் நடையில் தலையங்கங்கள் தீட்டி வருகின்றன.

ஆந்திர நாடெங்கும் வெறுப்புப் புயல்—அதிருப்தி அலை—கண்டனக் குரல் ஆகியவை கிளர்ந்து எழுந்து பெரும் புரட்சி செய்து வருகின்றன

ஒவ்வோர் அரசியல் கட்சியும் உரத்த குரலில் ஆளவந்தோர் மீது குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தபடி இருக்கின்றன.

ஆளவந்தார்களின் சொந்தக் கட்சியினர் கூட தங்கள் சர்க்கார் மீதே சந்தேகச் சொற்களையும் சஞ்சலப் பார்வையையும் செலுத்தத் தொடங்கியிருக்கின்றனர்.

உண்ணாவிரதம் தொடங்குவோம் என்று மிரட்டுகின்றனர் சிலர். சத்தியாக்கிரகப் போரை மூட்டிவிடுவோம் என்று பயமுறுத்துகின்றனர் வேறு சிலர்.

ஆந்திர நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் ஆட்சியாளர்கள் மீது ஆத்திர அந்தாதி அவசர அவசரமாக வாசிக்கப்படுகிறது.

ஆந்திர நாட்டிலே இந்த அளவுக்கு ஆத்திரமும் ஆவேசமும் மூண்டு, ஆளவந்தார்கள் மீது வெறுப்பும் துவேஷமும் வளர்ந்து, எங்கு பார்த்தாலும் அமைச்சர்கள் மீது அருவருப்பும் சிடுசிடுப்பும் காட்டப்படுகிறது என்றால், அதற்குக் காரணம் இன்னமும் ஆட்சியாளர்கள் ஆந்திர மாகாணத்தை அமைக்காமல் இருப்பதுதான்.

ஆந்திர மாகாணம் தேவை என்கிற கோரிக்கை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக நாட்டிலே சிலவிவரும் நெடுங்காலக் கோரிக்கையாகும்.

அந்தக் கோரிக்கை நியாயமானது.

நியாயமானது என்று ஏறத்தாழ இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது.

அதிலும் இன்றைய தினம் ஆளுங்கட்சியாக உள்ள அகில இந்திய காங்கிரஸ், 1920-ம் ஆண்டிலேயே ஆந்திர மாகாணம் அமையவேண்டியது அவசியம் தான் என்பதை நாக்பூர் காங்கிரஸ் தீர்மானத்தின் மூலம் தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கிறது.

காந்தியடிகளாரும் சரி, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வேறு எந்தத் தலைவரும் சரி, ஆந்திர மாகாணம் அமையத் தேவையில்லை என்று எந்தக் காலத்திலும் கூறியது கிடையாது.

காங்கிரஸ் கட்சியின் இன்றைய தலைவர் பண்டித ஜவகர்லால் நேருவும் ஆந்திர மாகாணப் பிரிவினையை எதிர்த்து எப்போதும் ஏதொரு சொல்லும் பேசியது கிடையாது.

1920 முதலே, காங்கிரஸ் கட்சி, தன்னுடைய கட்சி அரசியலைப் பொறுத்தவரையில், ஆந்திரப் பிரதேசத்தை ஒரு தனி மாகாணமாகவே கருதி, அந்தப்

(4 பக்கம் பார்க்க)

ஆபத்தான பாதையில் அமைச்சர் ஆச்சாரியார்

★

எதேச்சாதிகார தர்பாரின் எழிலோவியக் காட்சி

★

கேட்டது ரொட்டி! கிடைத்தது கருங்கல்!

★

"ஒரு நாட்டில் பத்திரிகைகளே இல்லாமல் அரசாங்கம் மட்டும் இருப்பதையா, அல்லது அரசாங்கமே இல்லாமல் பத்திரிகைகள் மட்டும் இருப்பதையா? இந்த இரண்டு நிலைமைகளில் எந்த நிலைமையை நீ விரும்புவாய் என்று என்னைக் கேட்டால் நான் ஒரு கணமும் தயங்காமல் விடை கூறுவேன், அரசாங்கம் இல்லாவிட்டாலும் கவலையில்லை — பத்திரிகைகள்தான் அவசியம் இருந்தாக வேண்டுமென்று!"

—தாமஸ் ஜெப்பர்சன்

அமெரிக்க நாட்டின் அறிவுத் தென்றல்—அந்த நாட்டை உருவாக்கிய புத்துலகச் சிற்பி—இளைஞர் தம் இதயத்தைக் கவர்ந்த இலட்சிய கீதம்—மக்களாட்சிக் கோட்பாட்டின் மகத்தான பாதுகாவலன் என்றெல்லாம் உலக அறிஞர்களால் ஒருசேரப் புகழப்படும் உத்தமர்களில் ஒருவர் தாமஸ் ஜெபர்சன்.

அத்தகைய அறிவின் செல்வர்தான் அழகாகக் குறிப்பிட்டுள்ளார் ஒரு நாட்டில் அரசாங்கமே இல்லாவிட்டால் கூட கவலையில்லை— ஆனால் பத்திரிகைகள் கட்டாயம் இருந்தாக வேண்டுமென்று.

உண்மையிலே ஒரு ஜனநாயக சமுதாயத்திற்கு ஈரலும் இருதயமும் போன்ற மிக முக்யமான உறுப்புகள் பத்திரிகைகள்தான்.

மக்கள் மன்றத்தின் எழுச்சிக் குரலாகவும் போராட்ட முரசாகவும் செய்தித் தூதுவனாகவும் இருந்து சிறப்பான பணிபுரியும் பெற்றிமை படைத்தவை பத்திரிகைகள்தான்.

ஆட்சியாளர்களின் கோணல்களையும் தவறுகளையும் இடித்துக்காட்டி, மக்கட் ,சமுதாயத்திற்கு அவர்கள் செய்து தீர வேண்டிய கடமைகளையும் காரியங்களையும் எடுத்துக்காட்டும் எழில்மிகு செயல் புரிபவை பத்திரிகைகள்தான்.

சமுதாயத்திலே நெளிகின்ற சங்கடங்களையும் சஞ்சலங்களையும் பஞ்ச நிலைகளையும் பரிதாப நிகழ்ச்சிகளையும் அனைவர் கண் முன்னாலும் கொண்டு வந்து நிறுத்தி, அந்தக் கொடுமைகளை வேரறுக்கும்கூர்வாட்களாகமாறுங்கள் என்று இலட்சியகாளைகளை அறைகூவி அழைக்கும் ஆற்றல் அமைப்புகள்பத்திரிகைகள்தான்.

மக்களுக்காக மக்களால் ஆளப்படும் மக்கள் ஆட்சியை நிறுவிடும் நற்பணியைச் செவ்வையுற முடிப்பதற்கான சிறந்த அறிவையும் தெளிவையும் பொதுமக்களுக்கு அளித்திடும் அருமையான ஆசான்கள் பத்திரிகைகள்தான்.

பத்திரிகைகள், நிகழ் காலக் கண்ணாடிகள்.

நிகழ்காலக் கண்ணாடிகள் மட்டுமல்ல, நிகழ் காலத்திற் படிந்து கிடக்கும்மகத்தான எதிர்கால சாடல்களைக் கண்டறிந்து தெ விக்கும் திட நெஞ்சு படைத் தீர்க்கதரிசிகள்.

திட நெஞ்சு படைத்த தீர்க் தரிசிகள் மட்டுமல்ல, புதி தோர் உலகத்தை, புதிய ஒ சமுதாயத்தை, புத்தம்புதிய ஒ வாழ்க்கையை உருவாக்கப் பா படும் சிந்தனைச் சிற்பிகள்.

புதிய சமுதாயத்தை உரு வாக்கும் புத்துலகச் சிற்பிகள் மட்டுமல்ல பத்திரிகைகள், அப் படிப்பட்ட புதிய சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிக்கு முட் டுக்கட்டை போடுகின்ற சர்வாதி கார சக்திகளை முறியடிக்க முனைந்து நிற்கும் ஜனநாயகப் பாதுகாவலர்களும் பத்திரிகைகளே ஆகும்.

பத்திரிகைகளிலே சில வகை யுண்டு— செங்காங்கடைத் தமி ழைச் செந்தமிழாக என்று பவை— வசைமொழி அந்தாதி யைத் தேசிய வெண்பாவாகக் கருதுபவை—மட்டரக மொழி வீச்சையே கலாச்சாரப் பாதுகாப்புப் பணியென்று போற்றுபவை— சாக்கடையிலே நெளிந்து குட்டையிலே ஊறிடும் அழுக்கு நெஞ்சு சுபாவம் படைத்தவை.

இருக்கின்றன அப்படியும் சில ஏடுகள். இல்லை யென்று நாம் கூறவில்லை. ஆனால் பெரும்பாலான ஏடுகள் ஜன நாயகமு

சுகளாகவும் மக்களின் உள்ளத் துடிப்புகளாகவும் சமுதாயத்தின் எழுச்சிக் குரல்களாகவும் அமைந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஹிந்துவையும் மித்திரனையும் கல்கியையும் விகடனையும் போல சுப ஜாதியின் சுகபோகத்தையே சுயராஜ்யப் பெருவாழ்வாக எண்ணிப் புகழ்ந்திடும் ஏடுகளாக இருந்தால் கூட, அந்த ஏடுகளிலும், மக்களின் உண்மைக் குரல், சிற்சில சமயம் ஒலிக்கத்தான் செய்கிறது.

சிற் சில குறிப்பிட்ட ஏடுகளைக் குறித்து எவ்வளவுதான் குறைகளும் குற்றங்களும் கூறப்பட்டாலும், பொதுவாகப் பத்திரிகை உலகம் என்கிற கண்ணோட்டத்தில் பார்க்கிற போது, பத்திரிகைகள், சமுதாயத்திற்கு மிக மிகத்தேவையான பண்டங்கள் என்பதை எவரும் ஒப்புக் கொண்டே தீரவேண்டும்.

ஒரு நாட்டிலே பத்திரிகைகளே இல்லாமற் போய்விடுமானால், அந்த நாட்டிலே, ஜனநாயகம் தழைக்காது; மக்கள் குரல் ஒலிக்காது; சமுதாயத்தின் சஞ்சலங்களும் சங்கடங்களும் ஆட்சியாளர்களின் பார்வைக்கு எட்டமாட்டா. மக்களின் குறைகள், அவர்களுடைய வேதனைத் துடிப்புகள், அவர்களின் நெஞ்சக் குமுறல்கள், இவை யெல்லாம் ஆட்சிப் பீடத்திற்கு அறிமுகம் ஆகமாட்டா.

மனித உடலுக்கு இரத்த ஓட்டம் எவ்வளவு முக்கியமோ, இலட்சிய வீரனுக்கு அஞ்சா நெஞ்சம் எத்தனை அவசியமோ, சிறந்த நகரத்திற்குத் தண்ணீர் வசதி எவ்வளவு கட்டாயமோ, அதே அளவு முக்கியமாக, அவசியமாக, கட்டாயமாக ஒரு சமுதாயத்தின் நல்வாழ்வுக்குத் தேவைப்படும் பொருள்கள் தான் பத்திரிகைகள்,

ஆகவேதான் பத்திரிகைகளுக்கு, எந்த ஜனநாயக நாட்டிலேயும், பொது மக்களுக்குத் தரப்படுவதைவிட சற்று அதிகமான அளவுக்கு உரிமைகள் தரப்படுவது வாடிக்கை.

ஜன நாயகம் என்று சொல்லப்படும் மக்கள் ஆட்சிக் கோட்பாடு வளர்ந்து ஓங்கித்தழைத்து நிற்கும் எந்த நாட்டிலேயும், அந்த நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் அளிக்கப்படுகின்ற பல்வேறு உரிமைகளில் மிக முக்கியமான உரிமை, தங்கள் உள்ளத்தில் ஊறிடும் கருத்துக்களை அச்சம் தயை தாட்சண்ணியமின்றி ஊருக்கெல்லாம் எடுத்துரைக்கும் உன்னத உரிமையே ஆகும்.

கட்டுக் காவலின்றிக் கருத்தைத் தெரிவிக்கும் இந்த உரிமை எந்த அளவுக்கு ஒரு நாட்டில் தழைத்திருக்கிறதோ அந்த அளவுக்குத் தான் அந்த நாட்டிலே ஜன நாயகம் தழைத்திருக்கிறது என்று பொருள்.

எனவே, ஜன நாயகம் தழைக்க வேண்டுமானால், கருத்தை வெளியிடும் உரிமை தழைத்து ஓங்கி வளரவேண்டும்.

கருத்தை வெளியிடும் உரிமை தழைத்து ஓங்கி வளர வேண்டுமானால், அந்த உரிமையைப் பயன் படுத்திக்கொள்வதற்கான கருவிகள் வளர்ந்து பெருகிச் செல்வாக்கு அடையவேண்டும்.

கருத்தை வெளியிடுவதற்கான கருவிகள் பலவகைப்பட்டவை.

பொதுக்கூட்டம்--கருத்தைத் தெரிவிப்பதற்கான ஒருமுறை.

ஊர்வலம்—கருத்தை அறிவிப்பதற்கான வேறோர் முறை.

பேட்டி—கருத்தை விளக்குவதற்கான இன்னோர் முறை.

மகஜர்—கருத்து விளக்கப் பணி புரிவதற்கான வேறோர் வழி.

புத்தகம்—அதே பணி புரிவதற்காக அமைந்துள்ள வேறொரு மார்க்கம்.

இங்ஙனமாக, உள்ளத்தில் தவழ்ந்திடும் கருத்துக்களை உலகத்தில் நடமாடவிட, வழிகள் பல உண்டு.

என்றாலும் இந்த வழிகள் அத்தனையையும்விட அதிக செல்வாக்கு உடைய வழி, உடனடிப் பலன் தரக்கூடிய வழி, ஜனநாயக சக்திகளை நிச்சயம் காப்பாற்றக் கூடிய வழி—பத்திரிகை.

பத்திரிகை! ஆம்! அதுதான் மக்களின் மனக்கருத்தைஎடுத்து விளக்குவதற்கான எழில்மிகு மார்க்கம்.

அப்படிப்பட்ட அருமையான மார்க்கமாக அமைந்திருக்கும் காரணத்தால்தான், பத்திரிகைகளுக்கு, சாதாரணப் பொது மக்களுக்குத் தரப்படுவதைவிட அதிகமான அளவு எழுத்துச் சுதந்தரம் தரப்படுகிறது சிறந்த ஜனநாயக நாடுகளில்.

அப்படித் தரப்பட்டால்தான் ஜனநாயகக் கோட்பாடு வளர்ந்து சிறந்து ஒளி வீசித்திகழும்.

இந்த உண்மைகளை இந்தியத் துணைக் கண்டத்தவர்க்கு எடுத்துவிளக்கிய பெருமை காங்கிரஸ் கட்சியினருக்கு உண்டு.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் இரும்புப் பிடியிலே இந்தியா சிக்கித் தவித்த காலத்தில், பத்திரிகா சுதந்தரம் தேவை என்று விண்ணதிர முழக்கமிட்ட வீரர்கள் காங்கிரஸ்காரர்கள்.

“பத்திரிகைகள் வளர்கின்றன என்றால் ஜனநாயகம் வளர்கிறது என்று பொருள்”—சொன்னார்கள் அவர்கள்.

“பத்திரிகைகளுக்கு எந்த கைய தடையும் விதிக்காமல் இருப்பதுதான் நாகரிக ஆட்சி

(6-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படியே தன்னுடைய எல்லா நடவடிக்கைகளையும் நடத்தி வந்திருக்கிறது.

ஆந்திர நாடு தனி மாகாணமாக அமைவதைத் தமிழர்கள், மலையாளிகள், கன்னடர்கள், ஆகிய ஏனைய திராவிட இனத்தவர்கள் என்றைக்குமே எதிர்த்துப் பேசியது கிடையாது.

ஆந்திரர்கள் தங்களுடைய நாட்டைத் தனி மாகாணமாக அமைத்துக் கொள்ள விரும்பினால் தாராளமாக அப்படியே செய்து கொள்ளட்டும் என்றுதான் இந்தியாவில் உள்ள ஏனைய எல்லா மாகாணத்தவர்களும் என்றென்றும் கூறிவந்திருக்கின்றனர்.

தமிழர்களுக்கே உரிய சென்னையை, ஆந்திரர்கள், தங்களுடையது என்று வல்லடி வழக்குச் செய்தபோது, அந்த ஆகாத போக்கை எதிர்த்து அழுத்தந்திருத்தமாகப் பேசியிருக்கின்றனர் தமிழர்கள்.

பெல்லாரி மாவட்டத்தில் உள்ள மூன்று கன்னட தாலுக்காக்களைத் தங்களுடையதாகப் பட்டயம் தீட்டிக்கொள்ள ஆந்திர அன்பர்கள் ஆத்திரம் கொண்டபோது, அந்தப் பேராசைப் பெருங்கொடுமையை எதிர்த்துக் கன்னடர்கள்போர்க் கொடி உயர்த்தியிருக்கிறார்கள்.

இங்ஙனமாகப் பிறருக்கு உரிய பகுதிகளைத் தங்களுடைய பகுதிகள் என்று தவறான ஆசைகொள்ளத் திராளான ஆந்திரர்கள் தயாராக நின்றபோது மட்டும், அப்போதும் அந்தத் தவறான ஆசையைப் பொறுத்த அளவில் மட்டும், ஏனைய மொழிவழி மக்கள் ஆந்திரமொழியினர்மீது கண்டனக் கணைகளைப் பொழிந்திருக்கின்றனரே தவிர, ஆந்திரர்கள், அவர்களுடைய சொந்தப் பகுதிகளை மட்டும் உள்ளடக்கிய சொந்த மாகாணத்தை அமைத்துக் கொள்வதை என்றைய தினத்திலும் எவரும் தடுத்துப் பேசியது கிடையாது.

நெடுங்காலக் கோரிக்கை—மிகவும் நியாயமான கோரிக்கை—எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கோரிக்கை—எவரிடத்திலேயும் எதிர்ப்பை ஏற்படுத்தியிராத கோரிக்கை—ஆளுங் கட்சியினரால் சென்ற முப்பதாண்டுகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கோரிக்கை—இன்றைய அமைச்சர்கள் முன்னாளில் வெறும் கிளர்ச்சித் தலைவர்களாகஇருந்தபோது ஓயாமல் எழுப்பி வந்த உன்னதமான கோரிக்கை, ஆந்திர மாகாண கோரிக்கை.

வெள்ளையரின் கரத்திலிருந்து காங்கிரஸ் கட்சியினரின் கைகளுக்கு இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பு மாறியபோது, அந்தக் கட்சியினால் நெடுங்காலமாக ஒப்புக்கொள்ளப்பட்டு வந்த ஆந்திர மாகாணக் கோரிக்கைஇரண்டொரு மாதங்களில் நிறைவேறிவிடும் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். அதிலும் குறிப்பாக ஆந்திரர்கள் மிக மிக ஆவலுடன், ஆந்திர மாகாணத்தை அமைத்தாகிவிட்டது என்ற செய்தி டில்லியிலிருந்து வருமென்றெண்ணி, வழிமேல் விழிவைத்து எதிர்நோக்கிக் கிடந்தனர்.

1947-ல் பிரிட்டானிய சகாப்தம் முடிந்து இந்தியாவில் காங்கிரஸ் சகாப்தம் ஆரம்பமாயிற்று.

அந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக ஆந்திர மாகாணம் அமைந்துவிடும் என்று பலரும் எதிர்பார்த்தனர், ஆனால் ஏமாந்தனர்.

1947 மறைந்தது. ஆனால் ஆந்திர மாகாணம் அமையவே இல்லை.

1948 ஆரம்பமாயிற்று. 1948லாவது ஆந்திர மாகாணம் அவசியம் அமைக்கப்பட்டுவிடும் என்று ஆந்திரர்கள் ஆர்வச் சிந்து பாடிக்கொண்டிருந்தனர். ஆனால் 1948-ம் 1947 ஆகவே முடிந்துவிட்டது.

1949

1950

1951

ஆண்டுகள் ஒவ்வொன்றாக உருண்டு ஓடி மறையலாயின, ஆனால் ஆந்திர மாகாணம் மட்டும் உருவாகவே இல்லை.

இன்றைய தினம்தான் உருவாகவில்லை என்றாலும் நாளையோ மறுநாளோ அல்லது அப்பால் ஓர் நாளோ உருவாகக்கூடும் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்குரிய அறிகுறிகூடத் தென்படக் காணோம்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள தேசியத் தலைவர்கள் ஆந்திர மாகாணப் பிரச்சினையில் அக்கறை காட்டுவதாகவே தெரியவில்லை.

ஆகவேதான் இன்றைய தினம் ஆந்திர நாட்டிலே ஆட்சியாளர்கள்மீது அளவற்ற வெறுப்பும் பகையும் வளர்ந்தோங்கி நிற்கின்றன.

ஆட்சியாளர்கள் மீது ஆந்திர மொழியினர்கள் ஆத்திரத்தைக் காட்டுவதிலே ஆச்சரியம் ஏதுமில்லை.

இத்தனை நாட்களாக ஆத்திரத்தைக் காட்டாமல் அடங்கிக் கிடந்தார்களே ஆந்திரர்கள், அந்தப்பகுதி தான் உண்மையில் ஆச்சரியப்படுவதற்குரியது.

ஆட்சியாளர்கள், ஆந்திரமாகாணம் அமைவது கூடாது என்று பேசுகிறார்களா? கிடையாது ஆந்திர மாகாணம் அவசியம் அவசியம் என்றே அழுத்தம் திருத்தமாகப் பேசுகிறார்கள்,

ஆந்திர மாகாணம் அமைவது அவசியம் என்று பேசுகிறார்களே, பேசிய பேச்சைச் செயல் வடிவில் காட்ட ஆந்திர மாகாணத்தை உருவாக்கியாவது தீர்க்கிறார்களா? அதுவுமில்லை. ஆந்திர மாகாண அமைப்பைப்பற்றி அணுவளவும் கவலையின்றி ஆனந்தமாக உலவி வருகிறார்கள்.

ஆந்திர மாகாணம் அவசியம் என்பதையும் ஒப்புக் கொள்கிறார்கள். அதே நேரத்தில் ஆந்திர மாகாணத்தை அமைக்கவும் மறுக்கிறார்கள்.

ஆகவே தான் ஆந்திர மொழியினருக்கு இன்றைய ஆளவந்தார்கள் மீது கடுங் கோபம் பிறக்கிறது.

பிறக்கத்தானேச் செய்யும்

ஆந்திர மாகாண அமைப்பு அவசியமற்றது என்று கருதுபவர்கள் இத்தகைய மாகாணத்தை அமைக்காமலிருந்தால் இந்தச் செயலை நம்மால் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் மீது நமக்கு ஆத்திரமும் பிறக்காது.

ஆனால் ஆந்திர மாகாணப் பிரிவினை தேவை தேவை என்று இடி முழக்கம் செய்பவர்களே, இத்தகைய மாகாணத்தை அமைக்கும் ஆற்றல் இருந்தாலும், இதனைச் செய்யாமல் இருக்கின்றனர் என்றால் இந்த நேரத்தில் யாருக்குத்தான் எப்படி ஆத்திரம் பிறக்காமல் இருக்க முடியும்?

படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயிலை என்றால்—

பேசுவது திருவாசகம், தூற்றுவது சிவனார் ஆலயத்தை என்றால்—

பிரசாரம் செய்வது ஜீவகாருண்யத்தை, உண்டு மகிழ்வது கெண்டைமீனை என்றால்—

ஓயாமல் பாராட்டுவது பொதுவுடமைத் தத்துவத்தை, ஆனால் கசக்கிப் பிழிவது ஏழை எளியவர்களை என்றால்—

ஆத்திரம் எப்படி ஏற்படாமல் இருக்கும்?

ஏற்படத்தான் செய்யும்.

ஏற்படத்தான் வேண்டும்.

ஆந்திர மாகாணத்தை அமைப்பது தங்களுக்குப் பிடித்தமில்லை என்றால் ஆட்சியாளர்கள் அதனைத் தெளிவாகத் தெரிவித்து விடட்டும். இன்னின்ன காரணங்களால் ஆந்திர மாகாண அமைப்பு நாட்டு நலத்திற்கு மாறுபட்டது என்பதைத் திட்டவட்டமாக அறிவித்து விடட்டும். ஆந்திர மாகாணம் அவசியம் என்று கருதுபவர்களை, அது தேவையில்லை என்பதற்கான காரணங்களைக் காட்டித் தங்கள் பக்கம் திருப்பிக் கொள்ளட்டும்

அல்லது ஆந்திர மாகாணம் அவசியம்தான என்று அவர்கள் கருதுவார்களானால் உடனடியாக ஆந்திர மாகாணத்தை அமைக்கும செயலிலே அவர்கள் நாணயமாக ஈடுபடட்டும்.

இந்த இரண்டு வழிகளிலே ஏதாவதொன்றைக் கடைப்பிடிப்பதுதான் ஒழுங்கு. அதுதான் நியாயம். அதுவேதான் முறை.

இரண்டு வழிகளிலே எந்த வழியையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளாமல், ஆந்திர மாகாணம் அமைவது அவசியம் என்றும் பேசிக்கொண்டு, அதே நேரத்தில் ஆந்திர மாகாணத்தை அமைக்காமலும் இருப்பது என்றால் அது நாணயமுமல்ல. நேர்மையும் ஆகாது.

ஒரே சமயத்தில் பாலுக்கும் காவலனாக, பூனைக்கும் தோழனாக இருந்துகொண்டிருந்தால் பாலையும் காப்பாற்ற முடியாது. பூனையையும் நண்பனாகப் பெற முடியாது.

பேச்சளவில் ஆந்திர மாகாணத்தை ஆதரித்துக்கொண்டும், அதே நேரத்தில் செயல் துறையில் அதனை எதிர்த்துக் கொண்டும் இருக்கும் இன்றைய போக்கினால், ஆளவந்தார்கள், ஆந்திரர்களுடைய உள்ளத்தில் தங்கட்குப் பகையையும் வெறுப்பையுமே தேடிக்கொள்பவர்கள் ஆகிறார்கள்.

ஆந்திர நாடு இன்றைய தினம் ஆத்திர நாடாக மாறியிருக்கிறது ஆட்சியாளர்களின் இந்த இரட்டை வாழ்வு காரணமாக.

ஆத்திர நாடு ஆவேச நாடாக மாறி ஆட்சியாளர்கள் மீது அறப்போர் தொடுப்பதற்கு முன்னால் ஆளவந்தார்கள் தங்கள் ஆகாவழிப் போக்கிலிருந்து மாறியாக வேண்டும்.

மாறினால் தான் அவர்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது.

திராவிட முன்னேற்ற கழகம்
முத்தியாலுப் பேட்டை கிளை

24—9—51 திங்கட் கிழமை மாலை 6½ மணிக்கு மேற்படி கழகப் பொது உறுப்பினர் கூட்டம் "போர் வாள்" அலுவலகத்தில் தோழர் பி. வீரராகவன் அவர் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் 1951—52 ஆம் ஆண்டுக்குரிய புதியநிர்வாகக்குழு கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்: இரா சண்முகம். துணைச் செயலாளர்: டி. லோகநாதன். பொருளாளர்: காஞ்சி. மணிமொழியார். விளம்பர உறுப்பினர்: வி. எஸ். வெற்றிச்செல்வன். செயலுறுப்பினர்கள்: என். பஞ்சாட்சரம். ஆ. மு. சம்பந்தம். பி. வீரராகவன், எம். ஆர். சந்திரன். K. மாணிக்கசாமி, A. S. மணி, சி. புலியரசன்.

அடுத்து, அண்மையில் நடைபெறப்போகும், தி. மு. க. மாகாண மாநாட்டுக்கு ரூ. நாற்பது நன்கொடை கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யின் நல்லியல்பு"—விளக்கினார்கள் அவ்விவேகிகள்.

"பத்திரிகைகளுக்கும் தடை விதிக்கிறதே இந்தப் பிரிட்டானியம்! என்ன அக்கிரமம்! எவ்வளவு பெருங்கொடுமை!"—கர்ஜனை புரிந்தார்கள் அக்கண்ணியவான்கள்.

"சிந்தனைக்குமா 144? பத்திரிகைகளுக்கா ஜாமீன் உத்தரவு? அடுக்குமா இப்போக்கு? ஆகுமா இந்த அநீதி?"—இரத்தக்கண்ணீர் வடித்தார்கள் அந்த "இலட்சிய புருஷர்கள்"!

"பெற்றே தீருவோம் பத்திரிகைகளின் உரிமையை! உடைத்தே தீருவோம் அவற்றிற்கு இடப்பட்ட தளைகளை"—ஓங்காரக் குரலில் உலகறிய முழக்கமிட்டார்கள் அந்த "உத்தம புத்திரர்கள்".

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தால் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்ட தடைச் சட்டங்களை எதிர்த்து அந்தக் காலத்தில் தேசியவாதிகள் திக்கெட்டும் சென்று தீப்பொறி பறக்கப் பேசினார்கள். விட்டோமா பார் இந்த வீணாட்சியை என்று வீராவேசத்துடன் வார்த்தைகளை வீசினார்கள். எழுதுகோலை முறிக்கும் இந்த எத்தர்களின் சட்டங்களைத் தூள் தூளாக்கினால் ஒழிய ஒருநாளும் ஓயமாட்டோம் என்று அஞ்சா நெஞ்சுடன் அறப்போர் முழக்கம் புரிந்தார்கள்.

சில சமயம், கருத்து உரிமை எங்கள் பிறப்பு உரிமை என்று செந்தமிழிலே செழுஞ் சுவையைச் சேர்த்து இன்பமான முறையிலே எழிலாகப் பேசினார்கள்.

வேறு சில சமயம், "பத்திரிகா சுதந்தரத்திற்கான பக்குவமான போராட்டம் பாரீர்—பாரத புத்திரர்காள் புனிதராம் இப்பட்டாளத்தில் சேர்ந்திட வாரீர்" என்று கவிதை நடையிலே கண்ணியமான முறையிலே தங்கள் கருத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கருத்துரிமைப் போராட்டங்கள் பற்பல நடத்தினார்கள். அதற்காக ஆயிரமாயிரவர் அணி அணியாகச் சிறைக்கோட்டம் புகுந்தார்கள்.

தியாகத் தீயிலேயும் குதித்தார்கள்—தடியடி தர்பாருக்கும் உள்ளானார்கள்.

ஏகாதிபத்ய ஆட்சிக் காலத்தில் இப்படியெல்லாம் பத்திரிகை சுதந்தரத்திற்காகப் போராடிய பாரத புத்திரர்கள் கைக்கு ஆட்சி மாறியதும், இந்தியத் துணைக் கண்டத்து எழுத்தாளர்கள் எல்லாம், "இனி நமக்கு ஜெபமுண்டு பயமில்லை மனமே" என்று ஆநந்தப் பள்ளு பாடினார்கள். "தடையில்லை நமக்கினி! தடையில்லை! தடையில்லை!" என்று உள்ளம்பூரித்து உவகை பொங்கப் பேசினார்கள். நெஞ்சில் பட்டதைப் பட்ட வண்ணம் தெரிவிப்பதற்கான முழு உரிமையையும் தேசியவாதிகள் தங்கட்குத் தருவார்கள் என்று திடமாக நம்பினார்கள்.

"ஆமாம்—தரத்தான போகிறோம்—முழு உரிமை—பரிபூரண சுதந்தரம்—கட்டுக் காவலற்ற சுதந்தரம்" என்று ஆசைவார்த்தைகள் பல கூறி, தேசிய ஆட்சியாளர்கள், எழுத்தாளர்களின் ஆவல் தீயிலே ஆர்வ எண்ணெயை ஊற்றினார்கள்.

"பத்திரிகை சுதந்தரத்திற்காகப் பெரும் போர் புரிந்தவர்களல்லவா—ஆகவேதான் நமக்கு ஆர்வத்துடன் உரிமைகள் தர இருக்கிறார்கள்" என்று எழுத்தாளர்கள் இன்பமொழி பேசி, ஆநந்த நடை நடந்து, களிப்புக் கடலில் குதித்து, மகிழ்ச்சி அலைகளைத் திக்கெட்டும் பரப்பியபடி இருந்தார்கள்.

திக்கெட்டும் பரப்பியபடி இருந்தார்கள்—ஆனால் அவர்களைத் திடுக்கிட வைத்துவிட்டார் ஸ்ரீலஸ்ரீ இராஜகோபால ஆச்சாரியார்!

பத்திரிகை மசோதா என்ற பெயரால் டில்லி பாராளுமன்றத்தில் இதுபோது புதியதோர் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் அன்பர் ஆச்சாரியார்!

இந்தச் சட்டமோ எழுத்தாளர்கள் எதிர் பார்த்ததைப் போலப் பரிபூரண சுதந்தர மசோதாவாக இல்லை. அக்கி

ஈ. வெ. கி. சம்பத் பேசுகிறார்

தி. மு. கழக வரலாறு இந் நூலில் சம்பத் அவர்களால் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

16 பக்கம் **விலை அணா 3.**

கிடைக்குமிடம்:

பரிதி பதிப்பகம்

திருத்தணி, (சித்தூர் மாவட்டம்)

மமான அடக்குமுறை மசோ
ாவாகத்தான் இருக்கிறது.

எழுத்துரிமைச் செல்வத்தை அளிக்கும்இன்பமானமசோதா அல்ல இது. பத்திரிகைகளின் உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் படுமோசமான மசோதா.

எழுத்தாளர்கள் எதிர் பார்த்தது மனமகிழ்ச்சியூட்டும் தென்றல்! ஆனால் ஆட்சியாளர்கள் அளித்திருப்பது விஷம்போல வெறுப்பூட்டும் வாடையை!

எழுத்தாளர்கள் விரும்பியது உடலத்திற்கு உரம் ஊட்டும் ரொட்டியை! ஆனால் ஆளவந்தார்கள் தந்திருப்பது உள்ளத்திற்கு எரிச்சல் ஊட்டும் கருங்கல் துண்டுதனை!

எழுத்தாளர்கள் கேட்டது பூந்தோட்டம் போன்ற வாழ்க்கையை! ஆனால் ஊராள வந்தவர்கள் உவப்புடன் கொடுத்திருப்பது பாலைவனம் போன்ற சாக்காட்டை!

அக்கிரமம்—ஆனால்உண்மை!

அநீதி—ஆனால் இன்றைய நிகழ்ச்சி!

கொடுமை! கொடுமை!—எவரானாலும் இப்படித்தான் கூறுவர் ஆச்சாரியாரின் அக்கிரமமான மசோதாவைக் கண்டு. ஆனால் உண்மை! உண்மை! ஆச்சாரியார் அவர்கள் ஆனந்தத்துடன்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்.

இந்த ஆச்சாரியார் மசோதா மட்டும் சட்டமாகிவிட்டால், அதன் பின்னர், பத்திரிகைகள், எவ்வளவுதான் அடக்கமாகவும் பொறுமையாகவும் எழுதுகோலை ஓட்டினாலும் சரியே, ஆட்சியாளர்கள் மனம் வைத்தால் அந்த ஏடுகளை உடனடியாக ஒடுக்கிவிட முடியும்.

அந்த அளவுக்குப் பலம் பொருந்திய அடக்குமுறை ஆயுதமாக அமைந்திருக்கிறது இந்த மசோதா.

பத்திரிகைகள் எதை எழுதினாலும் அதைக் குற்றம் என்று கூறி, இனி, அவற்றின்மீது கூர் வாளைப் பாய்ச்ச முடியும் ஆட்சியாளர்கள்.

இப்படி எழுதினால்தான் குற்றம்—இப்படி எழுதினால் குற்றமில்லை என்று தனித்தனியே வரையறுத்துக்கூறி எல்லைக் கோடு தீட்டமுடியாது இனி! எழுதப்படும் எழுத்து எதுவானாலும், அந்த எழுத்திலே சாந்தமும் சமாதானமும் எவ்வளவுதான் தவழ்ந்தாலும், அந்த எழுத்தைக் குற்றம்என்று கூறிக் கொடுமையான தண்டனைக்கு உள்ளாக்க முடியும் பத்திரிகைகளை!

ஆச்சாரியார் மசோதா அவ்வளவு அற்புதமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அறிவின் சிகரம் அல்லவா அவர் அக்ரகாரக் "கல்கி"யின் ஆச்சர்யமான அகராதிப்படி! ஆகவேதான்போலும் அவருடைய மசோதா எவ்வளவு சாந்தமான எழுத்தையும் குற்றம் என்று கூறிடத்தக்க விதத்தில் மிகத் திறமையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திறமை என்பது தங்களின் ஏகபோக மிராசு என்று பரம்பரைப் பட்டயத்தைக் காட்டிடும் புரோகித வர்க்கத்தின் தலைவர் ஆச்சாரியார்! அவர் தீட்டியுள்ள இந்த மசோதா உண்மையிலேயே அந்த இனத்தவர்களின் திறமைக்கு ஓர் தலைசிறந்த எடுத்துக் காட்டாகத்தான் இருக்கிறது.

திறமையுடன்தான் தீட்டப்பட்டிருக்கிறது மசோதா. இதை எவரும் மறுக்க முடியாது.

ஆனால் அந்த திறமை எந்தக் காரியத்திற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது — அதைத்தான் நாடு கூர்ந்து கவனிக்கவேண்டும்.

பத்திரிகைகளுக்குக் கருத்துரிமை தரும் கண்ணியமான காரியத்திற்கா பயன்பட்டிருக்கிறது அந்தத்திறமை—இல்லை—அவ்வளவு சாமான்யமான காரியத்திற்கா பயன்படும் "பூதேவா பரம்பரை"யின் அபூர்வத் திறமை—பத்திரிகைகளின் உரிமைகளை முற்றிலும் ஒழித்துக் கட்டும் "உயரிய" செயலுக்குப் பயன்பட்டிருக்கிறது அந்தத் திறமை. எவ்வளவு அமைதியான எழுத்தையும் குற்றம் என்று கூறிடத்தக்க விதமாக ஒரு சட்டத்தை உருவாக்குவது நம்மைப்போன்ற சாமான்யர்களால் நடக்கக்கூடிய காரியமா? அந்தத் திறமை நிச்சயமாக "அவா இவா" இனத்திற்குத்தான் சொந்தம்! இந்த உண்மையை விளக்கிடும் ஓர் எழில் மிகு எடுத்துக்காட்டுதான், ஆச்சாரியார் மசோதா!

ஆட்சியாளர்களின் நிர்வாகத் திறமையின்மையை, ஆறவுன்ஸ் அலங்கோலத்தை, ஆளத்தெரியாத 'ஐயோ பாவம்' தன்மையை, ஊழல்கள் மலிந்த உதவாக்கரைப் போக்கை எடுத்து விளக்கி எழுத்தோவியங்கள் தீட்டினால், அப்படித் தீட்டுவதை, "சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள சர்க்காரைக் கவிழ்ப்பது அல்லது கவிழ்க்கத் தூண்டுவது" என்ற பெயரால் குற்றப் பட்டியலில் சேர்த்துவிடுகிறது இந்த மசோதா.

பொதுக் கூட்டங்களுக்கு 144 போடுகின்ற கொடுமை, பொதுஜன பந்தோபஸ்து மசோதா என்ற பெயரால் மக்கள் உரிமைகளை மட்டம் தட்டுகின்ற கொடுமை, ஆட்சியாளர்கள் தங்கட்கு மாறான கொள்கை படைத்தவர்களை விசாரணையின்றிக் காவலில்

(15-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

சென்னை 6—10—51 சனிக்கிழமை

இரு சகோதரர்கள்!

சென்ற ஐந்தாண்டுகளாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் கண்ணியவான்கள் நாட்டிற்கு இழைத்துள்ள துரோகங்கள் ஏராளம்.

அவர்களுடைய ஆட்சியின் போக்கினால் நம் சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள சங்கடங்களும் சஞ்சலங்களும் ஆயிரமாயிரம்.

அவர்களுடைய நிர்வாகத் திறமைக் குறைவினால் இந்தியத் துணைக் கண்டத்திற்குக் கிடைத்துள்ள இழிவும் பழியும் துடைக்க முடியாத அளவு அதிகம்.

அவர்கள் ஓச்சிவரும் கொடுங்கோல் காரணமாக நம் சமுதாயத்தின் ஒழுக்கமும் கெட்டிருக்கிறது; வாழ்க்கையின் இன்பமும் தொலைந்திருக்கிறது.

ஆவேசக் குரல் எழுப்பி அண்டம் அதிர முழக்கமிட்டு வந்த அவர்கள் கையிலே நாட்டின் ஆட்சி சிக்கிய பிறகு, நாடு, சுடுகாடு என்று சொல்லத் தக்க நாச நிலையைத்தான் அடைந்திருக்கிறது.

இந்த உண்மைகளை நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் படைத்த எவரும் மறுக்க முடியாது. இவையெல்லாம் ஆதாரமற்ற வெறும் கற்பனைகள் என்று கூறி இவற்றை ஒதுக்கித் தள்ளுவதும் நடுநிலை பிறழாத நெறி படைத்த எவராலும் இயலாத காரியம்.

யார் யாருக்கு நம் நாட்டின் நல்வாழ்வில் உண்மை அக்கறை இருக்கிறதோ, யார் யாருக்கு நம் சமுதாயத்தின் சங்கடங்கள் தீர்ந்து சஞ்சலங்கள் தொலைந்து சுகவாழ்வு தோன்றவேண்டும் என்ற ஆவல் இருக்கிறதோ, யார் யாருக்கு இந்தியத் துணைக் கண்டம் அகில உலகிலேயும் ஒப்பற்ற புகழுடனும் இணையற்ற சிறப்புடனும் ஒளிவீசித் திகழ வேண்டும் என்கிற ஆர்வம் இருக்கிறதோ, யார் யார் இந்த இந்தியாவிலே மடமை தொலைந்து மமதை அழிந்து அக்கிரமம் சிதைந்து ஆணவம் ஒழிந்து வறுமையும் வாழ்க்கை மிடிமையும் மடிந்து பொதுவுடைமைப் புது வாழ்வு பூத்திடவேண்டும் என்று மனமாரவிரும்பி உடலாரப் பாடுபடுகிறார்களோ, அவர்கள் அத்தனை பேரும், இன்றைய ஆட்சியாளர்களால் இந்தியா அடைந்துள்ளது பெருங்கேடு என்பதனை ஒரு கணமும் தயக்கமின்றி உடனடியாக ஒப்புக்கொள்வார்கள்.

தேசியத் தம்பிரான்கள் நாடாளும் நாயகர்களாக மாறிய காரணத்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டுள்ள கெடுதிகளில் எல்லாம் தலையாய கெடுதி உள்ளத்தை மருட்டும் உணவுப் பஞ்சம்தான்.

ஊராள வந்த உத்தமர்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த உணவுப் பஞ்சத்தைப்பற்றி ஒரு கணநேரம் எண்ணிப் பார்த்தாலும் நம் உள்ளம் வேதனையின் வெள்ளமாகும். நம் கண்கள் துயரத்தின் சின்னங்களாகும். நம் கன்னங்களோ நீரருவி பாய்ந்தோடும் நீள்நிலங்களாக மாறிவிடும். நம் உதடுகள் நம்மையறியாமலே அந்தோ அந்தோ என்கிற அவலச் சொற்களை "வான வீதியில்நடமாடுக" எனப்பிரியா விடைகூறி அனுப்பிவைக்கும்.

உணவுப் பஞ்சத்தால் நம் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள அநீதியான நிலைமைகளும், அக்கிரமமான நிகழ்ச்சிகளும், பொறுக்கமுடியாத கொடுமைகளும், தாங்கமுடியாத வேதனைகளும் ஒன்றல்ல இரண்டல்ல, ஆயிரமாயிரம்!

உடலும் உள்ளமும் நலமாக இருக்கவேண்டுமானால், நாடியும் நரம்புகளும் முறுக்கேறி நிற்க வேண்டுமானால், நோய்நொடி இல்லா வாழ்வு மக்களுக்கு அமைய வேண்டுமானால், எல்லோருக்கும் நாள்தோறும் பதினாறு அவுன்ஸ் அரிசி கிடைத்தாக வேண்டும். ஆனால் இன்றையதினம் கிடைப்பதோ பதினறவுன்ஸ் அல்ல, பத்தவுன்சும் அல்ல, எட்டு அல்ல, ஏழும் அல்ல, ஐயோ பரிதாபமே என்று அழைக்கத் தக்க ஆறே ஆறு அவுன்ஸ்!

பதினாறு கிடைக்க வேண்டிய நாட்டிலே வெறும் ஆறுதான் கிடைக்கிறது. ஆகவே தான் ஊக்கமும் உற்சாகமும் தவழ வேண்டிய சமுதாயத்திலே

சோர்வும் சோகமும் ததும்பி நிற்கின்றன.

போதுமான அளவு உணவு கிடைக்காத காரணத்தால், மக்களின் உடல் நிலை சரிகிறது; நோய்களை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அழிகிறது; எலும்பும் தோலும் அமைந்த கூடாரக்காட்சி தருகின்றனர் மக்கள்.

உடல் நிலை சரிவதால் உள்ளத்தின் நிலையும் இயல்பாகவே சரிந்து விடுகிறது. உடலிலே இருக்கவேண்டிய தெம்பு இல்லாமற்போவதால் உள்ளத்திலே பவனி வரவேண்டிய உற்சாகமும் நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்து விடுகிறது.

உடலிலே பலம் இல்லை— ஆகவே தொழிற்சாலைகளிலே உற்பத்தி குறைகிறது.

உள்ளத்திலே உற்சாகம் இல்லை— ஆதலால் நாட்டிலே நல்ல கலைகளின் வளர்ச்சி நசிந்து போகிறது.

உடல், உள்ளம், இரண்டிலேயும் சோர்வும் சோகமும் ஒருங்கே குடிகொள்ளும் காரணத்தால் மக்களுக்கு வாழ்க்கையிலே இருக்கும் பற்று மறைகிறது; பாசம் தொலைகிறது; நேசமும் அழிகிறது. வாழ்வாவது மாயம் —இது மண்ணாவது திண்ணம் என்கிற. விரக்தி மனோபாவம் விரைவாகப் பரவுகிறது. வாழ்க்கை என்பது பாரமான ஒரு சுமை என்கிற எண்ணம் எல்லோருடைய உள்ளத்திலும் ஏற்பட்டு விடுகிறது. "என் பிறப்பித்தாய் என்னை இந்த உலகத்தில்— ஈசனே—சிவகாமி நேசனே" என்கிற கவிதையையே விநாடிதோறும் கூறி அழுகின்ற விபரீத நிலைமை உருவாகி விடுகிறது.

வாழ்க்கையின் வசீகரம் வாடிவிட்டபிறகும் மக்கள் வாழத்தான் செய்கிறார்கள் என்றாலும் அந்த வாழ்க்கை வாழ்க்கையாக இருப்பதில்லை. வாழ்க்கை என்கிற வெளித்தோற்றத்தைக்கொண்டுள்ளதோர் நடமாடும் மரணமாகத்தான் இருக்கிறது.

அந்த நிலையிலே வாழ்கின்ற மக்களை, 'மக்கள்' என்று ஒப்புக்கு வேண்டுமானால் கூற நாம் ஒப்புக்கொள்ளலாமே தவிர உண்மையில் அவர்கள் மக்கள் என்கிற மகத்தான பெயருக்கு ஏற்றவர்கள் ஆகமாட்டார்கள். நடைப் பிணங்கள் என்கிற சொற்றொடர்தான் அவர்களுக்கு அந்த நிலையிலே மிகவும் பொருத்தமான பட்டப் பெயராகும்.

உடல்நிலை சிதைந்து, உள்ளத்தின் உயரிய பண்புகள் குலைந்து, நித்தநித்தம் கிளர்ந்து எழவேண்டிய ஊக்கமும் உற்சாகமும் தொலைந்து, வாழ்க்கையில் இருக்கவேண்டிய பாசமும் பற்றும் மறைந்து, இறப்பினை எதிர்நோக்கிக் கிடக்கின்ற இன்னல்மிகு நிலைமை உருவாகிவிட்டது —என்கிற இந்த அளவோடு கூட நிற்பதில்லை உணவுப் பஞ்சத்தால் உருவாகியுள்ள உள்ளம் உருக்கும் நிலைமைகள்.

உணவுப் பஞ்சம் பல சமயங்களிலே பொறுமைப் பஞ்சத்தை ஏற்படுத்திவிடுகிறது. பொறுமைப் பஞ்சம் பொதுவாக அறிவுப் பஞ்சத்திற்கு வித்திட்டுவிடுகிறது. இந்த மூவகைப் பஞ்சங்களும் ஒன்று சேர்கிறபோது, அந்தச் சேர்க்கையிலிருந்து மரணம் என்கிற குழந்தை உருவாகிவிடுகிறது.

ஆம்! உணவுப் பஞ்சத்தின் காரணமாகப் பலர், வாழ்க்கைபுரியை விட்டுவிட்டு மரணபுரிக்குச் சென்றுவிட்டனர் என்பதைத் தினசரி இதழ்கள் பல அடிக்கடி நமக்குத் தெரிவித்தபடி இருக்கின்றன.

உணவுப் பஞ்சத்தால் உருவாகிற மரணம் சில சமயங்களில் பட்டினிச் சாவு என்கிற அந்த நிலையிலே அமைகிறது. வேறு சில சமயம் தற்கொலை என்கிற விபரீத வடிவம் அடைகிறது. மற்றும் சில சமயம் பிறரைக் கொலை செய்துவிடுவது என்கிற பயங்கர உருவமும் பெற்றுவிடுகிறது.

உணவுப் பஞ்சத்தின் பயங்கரப் பசிக்கு இரையாகிறவர்களிலே சிலர் சோம்பேறிகள்— அவர்களை, பட்டினிச்சாவு, அள்ளிவிழுங்கிவிடுகிறது. வேறு சிலர், கோழைகள்—அவர்களை, தற்கொலைப் பாதை, அறைகூவி அழைக்கிறது. இன்னும் சிலர் முரடர்கள் — அவர்களுக்குக் கொலை புரியும் மார்க்கமே ராஜபாட்டையாகத் தெரிகிறது.

உணவுப் பஞ்சத்தின் உருட்டுவிழிகளைக் கண்டு ஒரு சிறிதும் அஞ்சாமல் உல்லாசமாக வாழ்பவர்களும் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் பணக்குண்டுகளைத் தங்கள் கரங்களிலே பெற்றிருப்பவர்கள். தேவையான எந்தப் பொருளையும் எவ்வளவு விலை கொடுத்து வேண்டுமானாலும் வாங்கி நுகர்கின்ற வாய்ப்பும் வசதியும் பெற்றிருப்பவர்கள். திருவாளர் ரூபா அணா பைசா அவர்களின் நீங்காத் தோழமையில் திளைத்து மகிழ்பவர்கள். அத்தகையவர்களுக்கு உணவுப் பஞ்சம் என்கிற வெள்ளத்தில் சிக்கித் தவிக்கவேண்டிய சங்கடம் கிடையாது. கள்ள மார்க்கெட் என்கிற வானவூர்தியில் ஏறி, அதிக விலை என்கிற ஆகாய மார்க்கமாகப் பறந்து, தேவைக்கேற்ற பண்டம் என்கிற அக்கரைச் சீமையை மிக எளிதில் அடைந்துவிடுவார்கள்

(12-பக்கம் பார்க்க)



பனிரெண்டாம் பகுதி

வெற்றிமுல்லைக்கல்ல!...

நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். பாலைநாட்டின் மாடமாளிகை, கூடகோபுரங்களெல்லாம் அழிக்கப்பட்டுக் கிடக்கின்றன! முல்லைநாட்டு வீரர்கள் அங்குமிங்கும் ஓடிப் பாலையில் முல்லைகளைக் கொல்கிறார்கள்! பாலையின் நாடு, நகரம், பட்டி, தொட்டி, மூலைமுடுக்குகளெங்கும் பயங்கரக்கூச்சல்!

முல்லை மன்னர் முத்துவீரர் என்னைப் பாதாளச் சிறையிலிருந்து மீட்க வருவாரென்பதற்காக நான் ஆயத்தமாக சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தேன். நெடுநேரம் கழிந்தது!

என் சிறையறையை நோக்கி ஒரு சிறு கும்பல் வருவதைக் கண்டேன்! பேருவகை கொண்டேன்! என்னை மீட்கவருகிறார்கள் அவர்கள் என்பதற்காக! முல்லை இராஜகுரு நஞ்சநாதரின் உருவம் தெரிந்தது!

"என் அருமை நஞ்சநாதரே!... வணக்கம்!...தாங்கள் உத்தமர்! பண்பாளர்! ஒழுக்கசீலர்! நேர்மையாளர்! நான் தங்களைத் தவறாக அர்த்தம் செய்துகொண்டு வெறுத்துவந்தேன்! என்னை மன்னித்துவிடுங்கள் நஞ்சநாதரே!... தாங்கள் எனக்காக அரசசபையில் பேசியதைக் கேள்வியுற்றபொழுது மிகுந்த அவமானமடைந்து, என் பழைய போக்கு குறித்து என்னையே நொந்துகொண்டேன்!..."—நான் அவரை வரவேற்று வாழ்த்தி மன்னிப்பு வேண்டினேன்!

"பரவாயில்லை இன்பதாசரே! நீர் என்மீது தப்பான எண்ணங்கள் கொண்டிருந்தீர்! ஆனால் நான் உம்மீது எப்பொழுதும் என்றும் நல்லெண்ணங்கள்தான் கொண்டிருந்தேன்! நீர் என்னைச் சந்தேகித்தீர்! 'பூசுரன்' என்பதற்காகவே என்னிடம் மறைமுகமாக வெறுப்பு காட்டினீர்! ஆனால் இப்பொழுது என் பண்புகளையுணர்ந்துகொண்டீர்!...பரவாயில்லை இன்பதாசரே!......" இப்படி அவர் என்னிடம் பேசுவாரென்றுதான் நான் எண்ணியிருந்தேன்!

ஆனால்!......

"அஹ்ஹஹ்ஹா!... என்னடா வரம்பின்றி வாழ்த்தி வரவேற்கின்றாய்?...அது மயானத்தில் உறங்கிக்கொண்டிருக்கிறானே முத்துவீரன் அவனிடம்தான் செல்லும்! என்னிடம் செல்லாது! உன் போற்றுதல்களாலும் புகழ்தல்களாலும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தாய்! ஆனால் என்னிடம் அது நடக்காது! நான் யாரென்று தெரிந்துகொள்! நான் பூசுரன்! சூத்திரப்பயல்களின் சொல்மாரியால் கரைந்து போகாதவன்! நஞ்சநாதன்!!..."

இந்தக் பதில்தான் வந்தது பரிவின்பா!...ஆம். பூசுரன் பாஷாணப் பார்வையைக்கக்கி, சாகசச் சிரிப்போடு பேசினான்.

"என்ன, நஞ்சநாதரே! எனக்கொன்றும் விளங்கவில்லையே!... வெற்றி முல்லைக்குத்தானே?..."—நான் கேட்டேன்.

"அஹ்ஹஹ்ஹா!...வெற்றி முல்லைக்கல்ல!....நஞ்சநாதனுக்கு!... பைத்தியக்காரப்பயலே! ஏமாந்த சோணகிரியே, வெற்றி நஞ்சநாதனுக்கடா, நஞ்சநாதனுக்கு!..." பூசுரன் பெருங்கூச்சலிட்டுப் பேசினான்.

"டேய் முட்டாளே!...தோல்வி பாலைப் புரவலனுக்குத் தானேயன்றி எனக்கல்லடா!..."—இது பாலைநாட்டுப் பூசுரன் பாஷாண பூபதி!

"முல்லை மன்னனும் பாலைப் புரவலனும் மரணத்தை முத்தமிட்டு விட்டார்கள்! இனி நீ ஒருவன்தான் பாக்கி!..."— நஞ்சநாதனின் பேச்சு!

"ஆ! என் நண்பர் இறந்துவிட்டாரா?......சதித்திட்டங்கள் அவரைச் சாய்த்துவிட்டனவா?...... அய்யோ!......நஞ்சநாதரே! ஒன்று கேட்கிறேன். அதற்கு மட்டும் தயவுசெய்து பதில் கூறிவிடும்!... என் மனைவியும் மகனும்?..."

"அஹ்ஹஹ்ஹஹ்ஹா!........ஆடிமாதக் காற்றில் அம்மிக்கல்லே பறக்கும்போது எச்சிலை—......"

"ஆ!......அப்படியானால் என் வேணியும் என் மகனும் இறந்துவிட்டார்களா?...... அய்யோ!...ஏ, கொலைபாதகா! நீ வாழ்வாயா?... நீ நாசமாகப் போகக்கூடாதா? நன்றியென்பது நீயறியாத ஒன்றா?...உயிருக்குயிராய் உன்னை மதித்த மன்னரின் உயிரையே குடித்தாயா?...ஒரு தீங்கும் செய்தறியா என் மனைவியையும் மகனையும் மரணபுரிக்கு அனுப்பிவிட்டாயா?...அடசண்டாளப் பேயே! ...பதவிப்பித்தனே! பணத்தாசைக்காரனே!..."

நான் ஆவேசமாகப் பேசிக்கொண்டேயிருந்தேன். நஞ்சநாதன் காவலாளிகளிடம் சைகை காட்டிவிட்டு நடக்கலானான். பின்னர் நடந்ததைக் கூறவும்வேண்டுமா?...ஆமாம். அக் காவலாளிகள் என்னை நையப்புடைத்துப் போட்டுவிட்டார்கள்!

பரிவின்பா! பார்த்தாயா உலகத்தை! பூசுரனின் போக்கை! சூழ்ச்சியை!...என்ன?.....சூழ்ச்சியின் விவரம் விளங்கவில்லையா?... சொல்லுகிறேன்!...ஏன் கண்ணீர் வடிக்கின்றாய்? எனக்காகவா?... பரிவின்பா! உன் உள்ளத்திலே இப்பொழுது கொழுந்துவிட்டெரியும் சினத்தீ என் கண்களுக்குத் தெரிகிறது! இப்பொழுதே நீ ஏதேதோ திட்டங்கள் தீட்டுகிறாய்! எனக்குத் தெரிகிறது!...அவை

பாவற்றிற்கும் நான் நல்லவழி வகுத்துக்கொடுக்கிறேன்!... நீ என் கதையைக் கேள்!... ஆமாம், உற்றுக்கேள்! இப்பொழுதுதான் புரியாமலிருக்கும் புதிர்களைப் பகரப்போகின்றேன்!...

பரிவின்பா! முல்லைக்கும் பாலைக்கும் நடந்த போரிலே முல்லை மன்னரும் பாலைப் புரவலரும் இறந்துவிட்டனர்! இல்லை! கொல்லப்பட்டிருக்கின்றனர், சூழ்ச்சிக்காரர்களால்!

என்னை முல்லையிலிருந்து விரட்டவேண்டும் — மன்னரிடமிருந்து பிரிக்கவேண்டுமென்பதுதான் சூழ்ச்சிக்காரர்களின் — நஞ்சநாதன், விக்கிரமன்—முதல் திட்டம்! பன்முறை அதைச் செய்ய முயன்றிருக்கிறார்கள்! ஆனால் படுதோல்வியடைந்துவிட்டிருக்கிறார்கள்! மன்னரிடம் என்னைப்பற்றித் தவறாகப் பேசிப்பார்த்தும் — கொலைகாரர்களின் தயவை நாடியும்—சேயிழைரசிகளின் சப்ரகூடமஞ்ச சாகச் சல்லாபப் பேச்சுக்களால் என்னை மரணபுரிக்கு அனுப்ப முயன்றும் அவர்கள் தோல்வியைத்தான் கண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டிருக்கிறது!—என்னை அத்தகைய செயல்களால் அடக்கவோ ஒடுக்கவோ விரட்டவோ ஒழிக்கவோ முடியாதென்பது!...என்னை முல்லையைவிட்டு விரட்ட ஓர் நல்ல திட்டம் தீட்டியிருக்கிறார்கள்! ஆம், பல்லை நறநறவென்று கடித்து வேலையைத் தொடங்கினால் அது வெற்றி பெறாது; பல்லையிளித்தே வேலையைச் செய்யவேண்டும்; கோள் பேச்சுக்களோ, கொலைவாளினாலோ, கொடியிடைக்காரிகைகளின் கோலாகலச் சிரிப்பு, குளிர்மதிப் பார்வை ஆகியவற்றாலோ தங்கள் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது; சாகசப் பேச்சு; சாந்த நாடகம் ஆகியவற்றால்தான் தங்கள் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது! தர்ப்பாசூரன் தன் திருவிளையாடலைச் செய்திருக்கிறான்! பல்லையிளித்துக் காரியங்களை நடத்துவதென்பது பூசுரனால் ஆகாத செயலா?...

ஆம், பரிவின்பா! முல்லைப் பூசுரன் தன் ஆப்த நண்பனான பாலைப் பூசுரனுக்குவிளக்கிக்கூறியிருக்கிறான் இவ்விஷயங்களைப்பற்றி!

"பாலைநாட்டுப் புரவலன் பரந்தாமனிடம் முல்லை ஓவியன் இன்பதாசனைப்பற்றி அதிகமாகப் புகழ்ந்து பேசி அவன் உள்ளத்தைக் கலைக்கவேண்டும்! எப்படியாவது இன்பதாசனை அவன் பாலைக் கழைக்கத்துடிக்குமாறு செய்துவிடவேண்டும்! அதை முல்லைக்குத் தெரிவிக்கவும் செய்துவிடவேண்டும்! பின்னர் நான் காரியங்களைக் கவனித்து அப்பயலைப் பாலைக்கனுப்புகிறேன்! அவனை நன்கு வரவேற்று அவன் ஓவியங்களை இரசித்தும் பின் மன்னனின் மனக்குளத்தைக் கலக்கவேண்டும்! ஓவியனைப்பற்றிய அருமை பெருமைகளை அள்ளி வீசி "இத்தகையவன் பாலைக்குரியவனாயில்லாதது ஓர் பெருங்குறை!... அவன் இந்த உலகில் உள்ளவரை பாலை பெருமைபெற முடியாது!..." என்றெல்லாம் பக்குவமாகப் பேசி புரவலனின் மனத்திலே முல்லைக் கலைஞன் மீது பொறாமையும் பொச்சரிப்பும் பொங்கியெழச் செய்யவேண்டும்!... அவனைச் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்துவாட்டவேண்டும்! அச்சூத்திரப் பயல் தப்பி ஓடினாலும் ஓவியக்கோலேந்தமுடியாதபடி அவன் கைவிரல்களைத் தறித்தெறியவேண்டும்!... இது முல்லைக்குத் தெரியவர வேண்டும்!... முல்லை மன்னன் முத்துவீரன் மனம் நொந்து போவான்! மருட்சி கொள்வான்! மாபெரும் கலைஞனை—மதிப்பு மிகுந்த ஓவியனை—மாண்பு மிகுந்த தன் நண்பனை இழிவு படுத்திய பாலைப்புரவலன் பரந்தாமன் மீது பெருங்கோபங்கொண்டு அவனைப் போர்க்களத்திலே பேட்டி கண்டு அவன் கொட்டத்தை யடக்கத் துடிப்பான்!... முல்லைக்கும் பாலைக்கும் போர் மூளும்!...

நண்பரே!...இங்குத்தான் விஷயமிருக்கிறது! ஆம், நம்முடைய நெடுநாளைய திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள ஒரு சிறந்த வழி!... ஆமாம், நீர் "துரோகத் திருவிளையாடல்" புரியவேண்டும் அப்போரில்! பாலை தோற்றுவிடும்! உடனே பாலைப் புரவலனைக் கொன்றுவிட வேண்டும்! நான் முத்துவீரனை மயானத்திற்கனுப்பிவிடுகிறேன்!... பின்னர் வெற்றி இரு நாடுகளுக்கும்!—இரு நாட்டுப் பூசுரர்களாகிய நமக்கு!... நீர் பாலை நாட்டுப் புரவலர்! நான் முல்லை மன்னன்!... பூபதி!... எப்படி இந்த நஞ்சநாதனின் யுக்தி!... சாணக்கியத்தின் அசல்வாடை வீசுகிறதென்கிறாயா?... நண்பரே! நம் திட்டங்கள் விரைவில் நிறைவேற வேண்டும்! எனவே நீர் காரியங்களைக் கடுதில் முடிக்க ஆவன செய்யவேண்டும்!... முல்லையில் விஷயங்களை ஒழுங்காக நான் முடித்துவிடுவேன்! விக்கிரமன் என்ற ஒரு விபீடணன் எனக்குக் கிடைத்துள்ளான்! அவன் என் கைப்பொம்மை! கோழை!... நான் அவனிடம் கூறியுள்ளேன், முல்லை வெற்றி பெற்றபின் அவன்தான் முல்லை மன்னன்(!) என்று!! பைத்தியக்காரன் என்னை நம்பிக்கொண்டிருக்கிறான்!... பூபதி!... சூத்திரப் பயல்களுக்குச் சுயபுத்தி கிடையாதென்பதை நிரூபிக்க இதைவிட வேறென்ன சான்று தேவை?..."

இப்படி முடக்கலனுப்பிப் பாஷாணபூபதியைத் தன் நாட்டில் இதற்கான பணிகளில் ஈடுபடச் செய்திருக்கிறான் நஞ்சநாதன்!

பிறகு பூசுரர்கள் வெற்றிகரமாகவே தங்கள் "பணியை" முடித்தனர்!

பரிவின்பா! இப்பொழுது உனக்குப் புரிகிறதா இந்தப் புதிர்கள்?... நஞ்சநாதன், நஞ்சற்ற நாகமென நடித்து முல்லை மன்னரைப் பாலை மீது போர் தொடுக்கச் சொன்னதற்குக் காரணம் விளங்குகிறதா? கனபாடியின் கைங்கர்யத்தைக் கண்டாயா? பார்ப்பனியத்தின் பண்பைப் பார்த்தாயா? பூசுரனின் புத்தியைத் தெரிந்து கொண்டாயா?...

பரிவின்பா! முல்லையிலும் பாலையிலும் பூசுரர்கள் ஆட்சி ஏற்படலாயின! ஆம், பாலைநாட்டுக்குப் புரவலன் பாஷாண பூபதி! முல்லை நாட்டின் இளவரசர் குழந்தையாயிருந்ததால் அரச வேலைகளைக் கவனித்து வருபவன் நஞ்சநாதன்! அன்னக்காவடிகள் அரியணையில்! மணியாட்டித்திரியும் மதோன்மத்தர்கள் தலையிலே மணிமுடிகள்! புல்லேந்திகளின் கைகளில் பொற்செங்கோல்கள்! கனபாடிகளின் காலடியிலே கன்னித் தமிழ் மக்

(14-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் "புண்ணிய புருஷர்கள்."

ஆனால் வறுமைத் தேளால் கொட்டப்பட்டு, வேதனைப் பாம்பால் வளைக்கப்பட்டு, செத்த வாழ்வு வாழும் ஏழை மக்கள் இருக்கிறார்களே அவர்களிலேதான், பலர், பற்பல சமயங்களில், மரணபுரிக்கு விரட்டப்பட்டுவிடுகிறார்கள் உணவுப் பஞ்சம் என்கிற ஆட்சியாளரின் அருமைத் திருமகனால்!

"உணவுப் பஞ்சம் காரணமாகப் பலர் பட்டினிச்சாவுக்கு உள்ளானார்கள்" — இந்தச் செய்தி சென்ற ஐந்தாண்டுகளாக நம் செவியில் அடிக்கடி விழுந்துவந்திருக்கிறது.

"போதுமான உணவு கொடுத்துத் தன் பொன்னான குடும்பத்தைப் போற்றி வளர்க்க முடியாத காரணத்தால் தற்கொலை செய்துகொண்டு பிணமாக மாறிவிட்டார்கள் பொறுமை இழந்த பலர்"—இப்படிப்பட்ட செய்திகளையும் நம் பாழும் செவிகள் அடிக்கடி கேட்டபடிதான் இருந்திருக்கின்றன.

ஆனால் அண்மையில் தேசிய ஏடாம் "தினசரி"யில் வெளிவந்துள்ள ஒரு செய்தி, பட்டினிச் சாவு—தற்கொலை என்கிற இந்த இரண்டு மரண நிலைகளை மட்டுமல்ல, கொலைபுரிவது என்கிற கொடூர நிலையையும் உணவுப் பஞ்சம் உருவாக்கியிருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக எடுத்து விளக்கியிருக்கிறது.

வட இந்தியாவிலே, லவகாங் என்கிற நகரத்திற்கருகே, தலஹி என்றோர் கிராமம் இருக்கிறதாம். அந்தக் கிராமத்திலே, ஓரே இல்லத்திலே, இரு சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்களாம் தத்தம் மனைவிமார்களோடு.

ஒரு சமயம், மூத்த சகோதரர், இரண்டு நாட்களாக, கையளவு அரிசிகூடக் கிடைக்காத காரணத்தால் முழுப்பட்டினி கிடக்க நேர்ந்ததாம். அவருடைய குழந்தைகள் பசியோ பசி என்று கூறிப் பதறி அழுதனவாம்.

அண்ணன், அண்ணி, அவர்களின் குழந்தைகள் அனைவரும் பட்டினி கிடந்து பரிதவிக்கும் காட்சியைக் கண்டு கண்கலங்கிவிட்டாராம் தம்பி.

தம்பியிடத்திலேயும் அரிசி அப்படி ஒன்றும் மூட்டை மூட்டையாகக் கொட்டிவைத்திருக்கவில்லையாம். அவரிடமிருந்த அரிசியும் ஒன்று அல்லது இரண்டு நாளைக்குத்தான்போதுமானதாக இருக்குமாம்.

அண்ணன் குடும்பமோ பட்டினியால் பரிதவிக்கிறது. தன்னிடமிருக்கும் அரிசியை அண்ணனுக்குத் தந்துவிட்டாலோ நாளை தன் குடும்பம் உணவின்றித் தவித்துத் திண்டாடத்தான் வேண்டும்.

அண்ணன் குடும்பத்தைப்பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றாமலிருப்பது மனிதத் தன்மையல்ல: தெரிகிறது தம்பிக்கு. ஆனால் அதே நேரத்தில் தன்னிடமிருக்கும் சிறிதளவு அரிசியை அண்ணனுக்கு அளித்துவிட்டால், அடுத்த நாள், தன் குடும்பம் பட்டினியால் துடிப்பது நிச்சயம்.

அண்ணன் குடும்பத்தைப்பட்டினிச்சாவிலிருந்து மீட்பது என்றால் தன்னுடைய குடும்பத்தைப் பட்டினிச் சாவை நோக்கித் தூரத்துவது என்றுதான் அர்த்தம். அப்படிப்பட்ட இக்கட்டான நிலையில்தான் நிற்கிறார் தம்பி.

நெடுநேரம் சிந்தித்தாராம்—என்னென்னவோ எண்ணினாராம்—இறுதியிலே, இன்றைய தினம் தன்னிடமிருக்கும் அரிசியில் ஒரு பகுதியை அண்ணனுக்கு அளிப்போம், அவர் குடும்பத்தைப் பட்டினியிலிருந்து மீட்போம், நாளைக்கு அரிசி கிடைத்தால் இரண்டு குடும்பத்தாரும் உண்போம், இல்லையேல் இருசாராருமே ஒன்றாகச் சாவோம் என்ற முடிவுக்கு வந்தாராம் தம்பி.

சிறிதளவு அரிசியைக் கையிலெடுத்துக் கொண்டு அண்ணனை நோக்கி ஓடினாராம்தம்பி ஆர்வத்துடன்! அண்ணனும், தம்பியை நோக்கி ஓடி வந்தாராம் ஆசையுடன்!

தன் கணவன், அரிசியை எடுத்துச் சென்று அண்ணனுக்

சென்னையில் பிரிவினை விழா

பிரிவினைவாரம் ஏழு நாட்களும வெற்றிகரமாக நடைபெற்றமைக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். முதல் நாளன்று ராயப்பேட்டை தோழர் N. V. நடராசன் அவர்களும் இரண்டாம் நாள் நுங்கம்பாக்கத்தில் குடந்தை S. K. சாமி K. A, மதியழகன அவர்களும் மூன்றும் நாள் புளியந்தோப்பில குடந்தை S. K. சாமி N. ஜீவரத்தினம் அவர்களும், நானகாம் நாள திருவொற்றியூரில் N, S. இளங்கோ அவர்களும அய்ந்தாம நாள செம்பியம் A. K. வேலன் தோழியர் சத்தியவாணிமுத்து, அவர்களும் ஆறம் நாள் மைலாப்பூரில் காஞ்சி மணிமொழியார், D. V. நாராயணசாமி ஈரோடு E. N. பாலகுரு அவர்களும், ஏழாம் நாள் N. S இளங்கோ. B. V; நாராயணசாமி, அவர்களும் உள்ளூர் தோழர்கள் இன்மொழி, D. V. கலைமணி R. T. அரசு M. S. கோவிந்தராசன், மற்றும் பல தோழர்களும் எங்கள் அழைப்பை ஏற்று கலந்து கொண்டமைக்கு மிகவும் நன்றி கலந்த வணக்கத்தை செலுத்துகிறோம். கிளைக்கழகத்தினர் நல்ல முறையில்கூட்டங்களைநடத்தித் தந்தமைக்குமாவட்டக் கழக சார்பில் எமது நன்றியைச் செலுத்துகிறோம். வணக்கம்

சி. வி, ராஜன்விளம்பரசெயலாளர்

குத் தருகின்ற காட்சியைக் கண்டு உள்ளம் கொதித்திருக்கிறாள் உத்தமத்தம்பியின் மனைவி. ஓடோடிச் சென்று அந்த அரிசியைத் தன் கணவன் கையிலிருந்து பறித்துக் கொண்டு திரும்பி வந்திருக்கிறாள்.

ஆசையோடு தம்பி அரிசியைத் கொண்டு வந்து தந்த காட்சியையும், அவசர அவசரமாக ஓடி வந்த அவர் மனைவி அதைக் தட்டிப் பறித்துச் சென்ற காட்சியையும் கண்டு உள்ளம் உடைந்துபோன அண்ணனின் மனைவி, மானம் தாங்காமல் தூக்கிலே தொங்கிப்பிணமாகியிருக்கிறாள். மனைவியின் முடிவைக் கண்டு, அவளின் கணவனும்தற்கொலைப் பாதையையே தஞ்சம் என அடைந்து மரண மாளிகைக்குள்ளே மகிழ்ச்சியுடன் புகுந்து விட்டாராம்.

தன் ஆசை அண்ணன், அருமை அண்ணி, இருவரின் மரணத்திற்கும் காரணம் தன் வாழ்க்கைத் துணையாளின் விபரீத நடத்தைதான் என்று எண்ணமிட்ட தம்பி, ஆத்திரத்தின் உருவமாக மாறி, ஆவேசப்புயல் என ஆடி, தன் அன்பு மனையாளை ஆக்ரோஷத்துடன் இழுத்துப் போட்டு, கைக்கோடாலியால் அவளைக் கருணையின்றி வெட்டிக் கொலை செய்துவிட்டாராம். கொலை செய்துமுடிந்தவுடனே தானும் தூக்கிட்டுக் கொண்டு மாண்டுவிட்டாராம்.

“திராவிட நாடு” அல்ல, “விடுதலை” அல்ல, தேசிய ஏடு “தினசரி” தான் தந்திருக்கிறது இந்தச் சோக வரலாற்றை.

ஒரு கொலை—மூன்று தற்கொலை—அரிசிப் பஞ்சமே இக்கோர மரணங்களுக்குக் காரணம்—கூறுகிறது “தினசரி” வெட்கம் மானம் ரோஷம் துளியுமின்றி!

செப்டம்பர் 16-ம் தேதி வெளிவந்த “தினசரி” ஏட்டிலே, முதல் பக்கத்திலேயே வெளிவந்திருக்கிறது கண்களைக் குளமாக்கும் இந்தப் பரிதாப சம்பவம்.

உணவுப் பஞ்சத்தை நாங்கள் தீர்த்துக் கட்டியாகிவிட்டது என்று வீண் பெருமை பேசி வரும் வெற்றாரவார முன்ஷி என்ன விடை கூற இருக்கிறார் உள்ளத்தை உருக்கும் இந்த உண்மை நிகழ்ச்சிக்கு?

காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் நாடாளும் தகுதி துளியளவும் கிடையாது என்று திக்கெட்டும் சென்று தேர்தல்முரசு கொட்டி வருகிறாரே காமராஜர், அவர் என்ன சொல்கிறார் காங்கிரஸ் ஆட்சியின் கபோதிப் போக்கினால் விளைந்துள்ள இந்த விபரீத சம்பவத்தைப்பற்றி?

காங்கிரசே தேசம், தேசமே காடகிரஸ் என்று எல்லாம் தெரிந்தது போலப் பேசி வருகின்றனவே சில ஏதும் தெரியாததுகள், அதுகள் என்ன சமாதனம் சொல்ல இருக்கின்றன சமாதானமே சொல்ல முடியாத இந்த வட நாட்டு நிகழ்ச்சிக்கு.

கேட்க விரும்புகிறோம் நாம் —மனிதருள் மாணிக்கமாம் பண்டித நேரு முதற் கொண்டு மீசையால் மறத் தமிழராய் விட்ட ம. பொ சியார் வரையிலே உள்ள எல்லாத் தேசிய வாதிகளையுமே கேட்க விரும்புகிறோம், நவகாங் வட்டாரத்தில் நிகழ்ந்திருக்கிற இந்த சோக சம்பவத்திற்குப் பிறகும் கூட எங்களுடைய ஆட்சிதான் சிறப்பான ஆட்சி என்று நீங்களெல்லாம் பேசுவதிலே நாணயம் என்பது நெல் முனை அளவாவது இருக்கிறதா? இருக்க முடியுமா? இருக்கிறது என்று ஒருக்கால் நீங்கள் சொன்னாலும் நாடு ஒப்புக் கொள்ளுமா?

தியாகத்தைவிலை பேசும் தேசியவாதிகளே, அன்னை பாரத தேவியின் அருமை மதலைகளே, ஆகஸ்டுப் புரட்சி செய்த அதிசயத் தியாகிகளே, எல்லோரும் ஒரு கணம் இங்கே வாருங்கள், அதோ, தொலை தூரத்தில், “நவகாங்” வட்டாரத்தில், “தலஹி” என்கிற கிராமத்தில், நான்கு பிணங்கள், ஆளத்தெரியாத உங்கள் ஆட்சியின் அவமானச் சின்னங்கள் போல அமைந்து கிடப்பதைப் பாருங்கள்.

பாருங்கள்— “பார்த்த பிறகும்கூட உன்னை ஒரு காங்கிரஸ் வாதி என்று சொல்லிக் கொள்ள உனக்குத் தைரியமிருக்கிறதா நெஞ்சமே?” என்று உங்கள் உள்ளத்தைக் கேட்டுப் பாருங்கள்.

கேட்டால், நிச்சயமாக அது விடை கூறும் இல்லை— இல்லை என்று!

ஆம்! நிச்சயமாக! அந்த இரு சகோதரர்கள் சாட்சியாக!!

2-வது குழந்தை புத்தகக் காட்சி

அக்டோபர் 8, 9,10 தேதிகளில் சென்னை தம்புச் செட்டி தெருவிலுள்ள முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் குழந்தைப் புத்தகக் காட்சி நடைபெறும். குழந்தைகளுக்காக இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் புத்தகங்களும், ஆங்கிலப் புத்தகங்களும் அக்காட்சியில் இடம்பெறும்.

குழந்தைகளுக்காகப் புத்தகங்கள்,பத்திரிகைகள் வெளியிடுவோர் தங்களுடைய பத்திரிகைகளையும், புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிரதியையும் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாணவ மாணவிகள் தங்களுடைய கையெழுத்துப் பத்திரிகைகள், புத்தகங்களையும் 1-10-51-க்குள் அனுப்புதல் நலம்.

காரியதரிசி, குழந்தை எழுத்தாளர் சங்கம், 4, ரட்லண்ட் கேட் காலனி, சென்னை—6.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்!... முல்லையும், பாலையும் ஆரியரின் ஆனந்த வீடுகளாக, உல்லாசக் கூடங்களாக, உன்னத உப்பரிகைகளாகமாறி விட்டன!...

பரிவின்பா!..., நாட்கள்—மாதங்கள்—ஆண்டுகள் உருண்டோடிக் கொண்டேயிருந்தன! இருபது ஆண்டுகள்!... அப்பப்பா! எவ்வளவு காலம்!... இந்த இருபதாண்டுகளையும் நான் பாலை நாட்டின் பாதாளச் சிறையிலேயே கழித்தேன் பரிவின்பா!

முல்லை மக்களும் பாலைப் பிரஜைகளும் குருடர்களாக, செவிடர்களாக, ஊமைகளாக வாழ்ந்து வருகின்றார்கள் தம்பி! எதையும் ஏனென்று கேட்க அஞ்சுகிறார்கள் அவர்கள்; வர்ணாஸ்ரமம் அவர்கள் வாய்களுக்குப் பூட்டுப் போட்டு வைத்திருக்கிறது! மனுதர்மம் அவர்கள் மதியிலே! மங்கமேற்படச் செய்துள்ளது! ஆரியத்தின் ஆணவப்போக்கையும், ஆதிக்கவாதிகளின் அதிகாரப்போக்கையும் கண்ணாரக் கண்டும் கருத்துக் குருடர்களாயிருக்கிறார்கள் கன்னித் தமிழர்கள்! ஆத்திரப்படவேண்டியவர்களை அன்பு கொள்ளச் செய்துள்ளது ஆரியம். பாயும் புலிகளை—பலப் பல போர்களில் பிணக்குவியல்களைக் குவித்த பெரும் வீரர்களைத் தங்கள் பாதந்தாங்கிகளாக இருக்கச் செய்துள்ளது பார்ப்பனீயம்...வாளேந்தி வெஞ்சமர் புரியும் வீர வம்சத்தினரைத் தங்கள் அடிவருடிகளாக ஆரியம் ஆக்கிக் கொள்ள எந்த ஆயுதங்களை உபயோகித்தது என்று கேட்கிறாயா? வீரத் தமிழர்களை வெஞ்சமரில் வெல்ல முடியுமா அந்த வேத மோதும் உன்மத்தர்களால்?... வீரத் தமிழர்களை உணர்ச்சியற்றவர்களாக, விபீடணர்களாக, தன்மான மற்றவர்களாக ஆக்கிக் கொண்டார்கள் ஆதிக்கவாதிகள்—தங்கள் வகையான வார்த்தைகளால்! வசீகரப் பார்வையால்! விருந்துக்குக் கெண்டையைக் காட்டும் தங்கள் வழக்கமான கைங்கரியத்தால்! சாந்த நடிப்பால்! சாது வேஷத்தால்!...

பரிவின்பா! பார்த்தாயா பார்ப்பனீயத்தை?...

முல்லையில் நஞ்சநாதன் நீலிக் கண்ணீர்வடித்தானும்! மன்னரின் மரணத்திற்காக! மன்னர் போர்க்களத்திலே உயிர் துறந்தாராம். விஷந்தடவிய ஓர் அம்பு அவர் அகன்ற மார்பைப் பிளந்து சென்றதாம்! புறமுதுகிட்டு ஓடாது போர்க் களத்திலேயே மாண்டாராம்! இதை உண்மைதான் என்று வைத்துக்கொண்டாலும் அந்த அம்பு யார் எய்தியதாக இருக்க வேண்டும்?...மன்னரின் மூச்சு நின்றுவிட்டதால் இளவரசர்—ஓராண்டுக் குழந்தை—முல்லையூர் மன்னராக்கப்பட்டார். ஆனால் அந்தப் பொறுப்புகளை யெல்லாம் பார்த்து வருபவன் நஞ்சநாதன் தான்!...

அவன் ஆட்சியின் அலங்கோலத்தை எடுத்துரைக்கவும் வேண்டுமா தம்பி... "தேனும் பாலும் இந்நாட்டின் தெருக்களில் ஓடும்; முல்லை, மாட மாளிகைகூட கோபுரங்களுடன், மாபெரும் கல்விச் சாலைகளுடன், மகோன்னத பூஞ்சோலைகளுடன், மதி மிகுந்த கலைஞர்களுடன் விளங்கும்!... பஞ்சமென்பது முல்லையை இனித் தஞ்சமடையமுடியாது! பட்டினியை இனி இந்நாட்டு மக்கள் பேட்டி காண முடியாது! வறுமையின் வெறியாட்டம், தரித்திரத்தின் தாண்டவம் ஆகியவற்றிற்கு இனி முல்லை மேடையாக விளங்காது! இனி இந்த நாட்டில் செல்வம் கொழிக்கும்! சுகத்தென்றல் வீசும்! சுபிட்ச நிலவுதான் பொழியும்! ..." என்றெல்லாம் கூறி மக்களை மயக்கி, அவர்கள் மனத்திலே அவன்மீது ஒரு நல்ல மதிப்பு எழச் செய்து, அவர்கள் அவனை அப்படியே நம்பச்செய்து தன் ஆட்சியை ஆரம்பித்திருக்கிறான்!...

ஆட்சி! ஆட்சியா அது!...அய்யோ! ஆட்சிப்பீடம் அக்கிரகாரத்தின் அடுக்களையாகிவிட்டதப்பா! மந்திரி, பிரதானியர், சேனைத் தலைவர் ஆகியோர் ஆதிக்கவாதியின் கைப்பாவைகள்! அக்கிரகாரத்தின் எக்களிப்பும் ஆதிக்கவாதியின் ஆர்ப்பாட்டமும் கொஞ்சமா?...

நாட்டிலே வறுமையின் கோரத் தாண்டவம்! பட்டினிப்பிணியால் பிணங்களாகச் சாய்ந்தவர்கள் பலர்! உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறாத உழைப்பாளிகள் எண்ணற்றவர்கள்! முன்னேற்றமடைய முடியாதவர்கள் கணக்கற்றவர்கள்!...

இந்த நிலையைப்போக்க முயன்றானா அம்மூர்க்கன்?... எப்படி முயல்வான்? அவன்தான் இந்த நிலையை ஏற்படுத்த முயன்றவனாயிற்றே!... அவன் ஆட்சியில் 'அவன் கும்பல்"—அக்கிரகாரக் கூட்டம் பெற்றுள்ள ஆதிக்கம் எவ்வளவு தெரியுமா? அரசவையிலே, அலுவலகங்களிலே, ஆய்வுக்களங்களிலே, இன்னும் பலப்பல இடங்களிலே, துறைகளிலே, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாயிருந்து வருகின்றனர், ஆரிய ஆதிக்கவாதிகள்!—தகுதி திறமை என்ற ஆயுதங்களை வைத்துக் கொண்டு!...நம் மக்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டவர்களாக, பதவிகளைப் பிடிக்க வாய்ப்பும் வசதியும், இல்லாதவர்களாக, பிற்பட்டவர்களாக்கப்பட்டவர்களாக, பேசாமடந்தைகளாக, வாய்திறக்கப்பயப்படுகிறவர்களாக உள்ளார்கள்!

தங்கள் இனம் ஆதிக்கவாதிகளின் ஆணவப் போக்கால் தேய்ந்து வருவதைக் காணச் சகியாத "சில', தன்மான வீரர்கள் ஆதிக்கவாதியை எதிர்த்து, அவன் ஆணவப் போக்கை மக்களுக்கு விளக்கி அக்கிரகாரத்தின் அக்கிரமச் செயல்களைக் கூறி, இனப்பற்று தமிழர்களுக்குள்ளேயிருக்கவேண்டும், வீணர்களை வீழ்த்தவேண்டும், உன்மத்தர்களின் தளையிலிருந்து அறுபட்டு உன்னத நிலையில் வாழ வேண்டும் என்றெல்லாம் கூறினால் அவர்களைப் படாதபாடுகளுக்குள்ளாக்கியிருக்கிறான் இப்பூசுரன்! சிறைச்சாலை! சிரச்சேதம்! தூக்குக் கயிறு! துளி விஷம்!... இவைதான்

"போர்வாள்"
சந்தா விவரம்

★

ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

அந்த இலட்சிய வீரர்களுக்கு அவன் அளித்த பரிசுகள்! ஆதிக்கம்பெற்ற ஆரியம், தனக்கு வாழ்வளித்த திராவிடத்திற்குச் செய்யும் கைங்கர்யம்! விருந்தாளி—இல்லை பிச்சைக்காரன், தனக்கு அன்னமிட்டவர்களுக்குச் செய்யும் கைம்மாறு!... சட்ட உருவிலே அடக்குமுறைக் கணைகளை வடித்துச் சரமாரியாக அவைகளைப் பொழிய ஆரம்பித்துவிட்டான் பூசுரன்!...

பரிவின்பா! முல்லை இம்மதோன்மத்தனின் சப்ரகூட அம்சதூளிகா மஞ்சம்! அக்கிரகார கும்பல் அவன் செல்லப்பிள்ளைகள்! முல்லை மக்கள் அவன் அடிமைகள்! அவன் வேட்டையாடும் விலங்குகள்!...

இந்த நிலைதான் இன்று இருந்து வருகிறது தம்பி!...

நான் பாலைச் சிறையிலிருந்து தப்பி முல்லைக்குச் சென்றபொழுது என்னால் அந்த நாட்டில் தங்கியிருக்க முடியவில்லை! என் மனம் என்னை அங்கு நிற்கச் செய்யவில்லை! மதோன்மத்தன் என்னை மரணபுரிக்கு அனுப்பி விடுவானென்ற பயம் கிடையாது எனக்கு! என் நாட்டு மக்கள், முல்லையின் முத்துக்கள், முத்துவீரரின் ஆட்சிக்காலத்தில் மகோன்னத நிலையிலே வாழ்ந்தவர்கள் இன்று மண்குடிசைகளிலும், மரத்தடியிலும் வாழ்வதைப் பார்த்தபொழுதும், உன்னத நிலையிலிருந்தவர்கள் ஓடேந்திப் பிச்சை எடுப்பதைப் பார்த்தபொழுதும், பிறந்த பொன்னாட்டில் வாழ வழியும் வசதியும் இல்லாத காரணத்தால் பிற நாடுகளில் கூலிக்காரர்களாயுழைக்கச் செல்லுவதைக் கண்டபொழுதும் நானடைந்த வேதனையும் வருத்தமும் எவ்வளவு தெரியுமா தம்பி!...என் அருமை மனைவியோடு நான் வாழ்ந்துவந்த வீடு இடிந்து பாழாய்ப்போய்க் கிடப்பதைக் கண்டபொழுது—என் மனைவியும் அருமை மகனும் அற்பனின் வாள்முனைக் கிரையானார்களென்பதைக் கேள்வியுற்றபொழுது நான் சிந்திய கண்ணீர் எவ்வளவு தெரியுமா தம்பி!...

இன்னொரு செய்திதான் என்னை இன்னுமதிகமாகத் துயரமடையச் செய்தது! ஆம். நான் முல்லைக்கேகியதே அந்நாட்டின் இளவரசரைக் காணுவதற்காகத்தான்! எனக்குத் தெரியும் என் மனைவியையும் மகனையும் அங்குக் காண முடியாதென்பது! இளவரசரை, என் ஆருயிர் நண்பரின் அழகு மைந்தரைக் காணவேண்டுமென்ற ஓரே எண்ணத்தோடுதான் நான் அங்குச் சென்றேன்!

பல நாட்களாக அவரைச் சந்தித்துப் பேச முயன்றேன். ஆனால் முடியாமற்போய்விட்டது!........ஓர் நாட் காலை அவர் குதிரைமீதேறி விரைந்து வந்துகொண்டிருந்தார். அவ்விளஞ் சிங்கத்தைக் கண்டேன்! இளமை கொழிக்கும் உடல்! வீரப்பார்வை!...ஆஹா!....என்ன அருமையான தோற்றம்!...என் உடல் சிலிர்த்தது! இருபதாண்டுகளுக்கு முன் தொட்டிலில் படுத்துக் கொண்டிருந்த தங்கச் சிலையா இது?...என எண்ணிப் பூரித்தேன். அதே நேரத்தில், உயிருடன் இருந்திருந்தால் ஏறத்தாழ இந்தப் பருவமுள்ளவனா யிருந்திருக்ககூடிய என் அழகு மைந்தனை நினைத்துக் கண்ணீர் வடித்தேன்!...

அன்று நான் இளவரசரைச் சந்தித்துப் பேச முடியாமற் போய் விட்டது!...

[தொடரும்)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கும் கொடுமை, அடிக்கடி மக்கள் நன்மைக்கு மாறான பல சட்டங்களை நிறைவேற்றிப் பிற்போக்குச் சக்திகளுக்குப் போராதரவு காட்டுகின்ற கொடுமை ஆகிய இக் கொடுமைகளை எதிர்த்து ஏதாவது எழுதினால், அப்படிப்பட்ட எழுத்துக்களை, "சட்டத்தை அமுல நடத்தும் போது தலையிடுவது" என்ற தலைப்பின்கீழ்க் குற்றமாக்கிக் காட்டுகிறது இந்த மசோதா.

தொழில் முதலாளிகளையும், நிலப் பிரபுக்களையும், ஜமீன் ஜாம்பவான்களையும், கள்ள மார்க்கெட் கழுகுகளையும், டாடா பிர்லா டால்மியாக் கூட்டத்தின் சுரண்டல் திட்டங்களையும் எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டங்களை ஆதரித்து எழுதினாலும் சரி, மேல்சாதிக்காரர்களின் ஆணவப் போக்குகளை எதிர்த்து ஆதித்திராவிடர்கள் நடத்தக்கூடிய சமுதாய விடுதலைப் போராட்டங்களைப் பாராட்டி எழுதினாலும் சரி, பிராமணீயக் கொடுமைகள்மீது எழுத்தோவியக் குண்டுகளை வீசி அவற்றைத் தவிடுபொடியாக்க முயன்றாலும்சரி, இப்படிப்பட்ட எழுத்துக்களை, "மக்கட் சமுதாயத்தின் பல்வேறு வகுப்புகளுக்கிடையே பகை மூட்டுவது" என்கிற காரணத்தைக் காட்டிக் குற்றமாகக் கொண்டுவிடும் இந்த மசோதா.

விளக்கி விளக்கிக் கூறுவானேன்—தொகுத்துச் சுருக்கிக் கூறுகிறோம்—யார், எதை, எப்போது, எதற்காக, எந்நிலையில் எழுதினாலும் சரி, அந்த எழுத்தை ஆட்சியாளர்கள் குற்றம் என்று கொண்டு கடுமையாகத் தண்டிக்கமுடியும் இந்தச் சட்டத்தின்படி.

ஆச்சாரியார் மசோதா, பெர்லின் பாதையிலே பயணம் செய்கிறது. சர்வாதிகாரச் சாலை வழி நடந்து செல்கிறது. முசோலினி மார்க்கத்தில் நடைபோட்டுக் காட்டுகிறது.

ஆச்சாரியார் மசோதா, ஜனநாயக இலட்சியத்திற்கு முற்றிலும் மாறுபட்டது. மக்கள் மன்றத்திற்கு மதிப்புத் தர மறுப்பது. பத்திரிகைகளின் சுதந்தரத்திற்கும் படுகுழி தோண்டுவது.

ஆச்சாரியார் மசோதா, அநீதியின் பிம்பம். கொடுமையின் உருவம். எதேச்சாதிகாரத்தனத்தின் எழிலோவியக் காட்சி. அடக்குமுறை தர்பாரின் ஆனந்தப் பள்ளு.

ஆச்சாரியார் மசோதா சட்டமாக மாறிவிட்டால் முற்போக்கான இலட்சியம் படைத்த ஏடுகள் ஒவ்வொன்றிற்கும் போராபத்து. அந்த ஏடுகளை அச்சடி

கத்துணிகின்ற அச்சுக்கூடங்கள் அத்தனைக்கும் நித்த நித்தம் ஆபத்து.

"சர்வாதிகாரப் பாதையில் சென்றிடு குழந்தாய்!" என்று கூறி, தம்முடைய அருமை மசோதாவை அன்புடன் ஆசிர்வதித்து அனுப்புகிறார் கண்ணன் காட்டிய வழியார்

அந்தப் பாதை மிகமிக ஆபத்தானது. ஆச்சாரியார்கள் அணுகக்கூடாதது. ஜனநாயகவாதிகள் எட்டியும் பார்க்கக்கூடாதது. ஜார்களுக்கும் ஹூயிகளுக்கும் சார்லஸ்களுக்கும் வெலிங்டன்களுக்கும் மட்டுமே உரிமையாக அமைந்தது.

அந்தப் பாதையிலே செல்லக்கூடாது ஆச்சாரியார். செலுத்தக்கூடாது தம் மசோதாவை.

அன்புடன் கூறுகிறோம், பணிவுடன் வேண்டுகிறோம், தாழ்ந்த குரலில் கேட்டுக்கொள்ளுகிறோம்:— "அன்பரே! ஆச்சாரியாரே! அறிவிற் சிறந்தவர் என்று ஆரிய குலத்தவரால் போற்றப்படுபவரே! ஜனநாயகக் கோட்பாட்டிற்குத் துரோகம் இழைக்கும் இந்தச் செயலைத் தயவுசெய்து நிறுத்தி விடுங்கள்! வேண்டாம், வேண்டாம், இந்த வேதனைச் செயல். இந்த விபரீதச் செயலை நீங்கள் செய்து முடித்தே தீருவது என்று துணிந்து விட்டால், எதிர்காலம் உங்களை ஏசும். ஜனநாயகம் உங்களைத் தூற்றும். வாலிபர் உள்ளம் உங்களை வெறுத்து ஒதுக்கும். புதிய இந்தியா உங்களைப் பிற்போக்கின் சின்னம் எனச் சித்தரித்துக்காட்டும். அந்த நிலைக்கு ஒரு தென்னாட்டவராகிய நீங்கள் ஆளாகக் கூடாது என்பது தென்னாட்டு மக்களுடைய ஆசை. ஏன்? அன்புக்கட்டளைகூட!"

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் மாநாட்டிற்காக அமைக்கப்படவிருக்கும் பந்தல் வரைப்படம் தயாரிக்கப்பட்டு, பந்தலமைப்பு வல்லுநர் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முகப்பு அலங்கார அமைப்புக்களை கவனிக்க பிரபல ஓவிய நிபுணர்கள் பானு பிரதர்ஸ் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மின்சார விளக்கு அமைப்பு வேலைகளுக்குரிய அமைப்புத் திட்டம் அத்துறையில் புகழ் பெற்றவர்களிடமிருந்து கோரப்பட்டுளது.

சென்னை மாவட்டத்திற்காக ரூ 1000. செங்கற்பட்டு மாவட்டத்திற்காக ரூ. 1200, தஞ்சை மாவட்டத்திலிருந்து ரூ: 1,750. கோவை மாவட்டத்திற்காக ஈரோடு மாநாடு மூலம் ரூ. 500 கோவை பொதுக்கூட்டத்தில் ரூ. 900. வடாற்காடு மாவட்டத்திற்காக, ஆரணியிலிருந்து ரூ. 185, திருப்பத்தூரில் ரூ. 1000 திருச்சி மாவட்டத்திற்காகக் குளித்தலையில் ரூ. 250, ஆமதாபாத்திலிருந்து ரூ. 150. மதுரை மாவட்டத்திற்காக திண்டுக்கல்லில் ரூ. 1000. தென்னாற்காடு மாவட்டத்திற்காக திண்டிவனத்தில் ரூ. 500 வந்துள்ளன.

சேலம் மாவட்டத்திலிருந்து, மாவட்டக் கழகம் கூடி, பணத்தை அனுப்பிவிடுவதாக அறிவித்துள்ளனர். நாஞ்சில் மாவட்ட நன்கொடையை பெற்றுக்கொள்ள பொதுச் செயலாளருக்கு அழைப்பு வந்துள்ளது. மாவட்டங்களும் நிதி வசூலில் மிக மும்மரமாக ஈடுபட்டுள்ளன.

நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமியும் அவரது நண்பர்களும் நடிக்கும் சந்திரோதயம், சாக்ரடீஸ், ஜமீன்மாளிகை ஆகிய நாடகங்களுடன், பெண்களே முழுப் பங்கேற்று நடத்தும் 'போராட்டம்' என்ற நாடகமும், குமிலெனு பில்லா என்ற தெலுங்கு நாடகமும் நடத்த முயற்சிகள் நடைபெறுகின்றன.

நம் கருத்துக்களை பரப்பிடும் நடனங்களை கலை நிகழ்ச்சியில் இடம் பெறச் செய்யவும் முயற்சி செய்யப்படுகிறது.

மாநாட்டில் பணியாற்றும் தொண்டர் படையின் ஒரு பகுதியினரைக் காஞ்சிபுரத்தில் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு, கொடி வணக்கம் பயிற்சியளிக்கவும் ஏற்பாடாகி யிருக்கிறது.

ஓவியக்கண்காட்சிக்கான சித்திரங்கள் சென்னை சாந்தி ஆர்ட்ஸ் ஓவிய நிபுணர் மாதவனிடம் ஒரு பகுதி தயாராகிக் கொண்டிருக்கிறது. காஞ்சியில் உலக அறிஞர்களின் படங்களும், அவர்கள் கூறிய பொன் மொழிகளும் நம் நெஞ்சையள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும், அவற்றினைக் கண்ட விஞ்ஞான மேதைகளும் உள்ள ஓவியங்கள் பார்க்கப் பரவசமாகின்றன. அரசியல் கிண்டல் படங்கள் ஏராளம் தயாராகியுள்ளன.

திராவிடத்தின் விவசாய விளைவுப் பொருள்கள் அத்தனையும் திரட்டிக் காட்டிடவும் முயற்சி செய்யப்படுகிறது.

உலக நாடுகளும், அவைகளின் இன்றையத் தலைவர்களின் உருவங்களும் அழகாக அமைக்கப் பட்டிருக்கின்றன. திராவிட இயக்கத்தின் மறைந்த தலைவர்களின் உருவங்கள் மிகப் பெரிய அளவில் எழுதப்பட்டு, 'இயக்கத்தின் பண்டைச் சரித்திரத்தை' நினைவூட்டுகின்றன.

பொதுச் செயலாளர், மாநாடு சம்பந்தமாக, இயக்க முக்கிய தோழர்களோடு ஆலோசித்து வருகிறார்.

விளம்பரக் குழு.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons)